# உதயன்

விலை ரூபா 6-00

13 சுடர்வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 23 செவ்வாய்க்கிழமை (07-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 189

பொது சன ... 08 JUL 1998 ... யாழ்ப்பாணம்

# திருகோணமலையில் நேற்று ஹர்த்தால்!

## நகரம் செயலிழந்தது

திருகோணமலை, ஜூலை 7

கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று திருகோணமலையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அதனால் நகரம் செயலிழந்தது

நேற்றைய ஹர்த்தால் காரணமாக நகரில் பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை. மாணவர் வரவின்றி அவை வெறிச்சோடிக் கிடந்தன.

கடைகள் இழுத்து மூடப்பட்டன. வீதிகளில் வாகன ஓட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

மூடியிருந்த கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களைத் திறக்கும்படி வீதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்று மாணவர் மீது தாக்குதல்!

திருகோணமலை, ஜூலை 7

கிழக்கு இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நடத்தி வந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு அருகே நேற்றுக் கூடிய பாடசாலை மாணவர்கள் விசேட அதிரடிப் படையினரால் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

மாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு அருகே வீதியோரமாகத் தரையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வேலையற்ற பட்டதாரிகள் நேற்று உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்

திருகோணமலை, ஜூலை 7

நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்குமாறு கோரி கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக நடத்திவந்த சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மாலை 4.30 மணியுடன் முடிவுக்கு வந்தது.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் ஆயிரம் பேருக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் —

எஞ்சிய 701 பேருக்கும் மூன்று முதல் ஆறு மாத காலப் பகுதிக்குள் நியமனம் வழங்கப்படும் எனவும் —

வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா எழுத்து மூலம் உறுதியளித்ததைத் தொடர்ந்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

ஜனாதிபதியுடனும், கல்வி உயர்கல்வி அமைச்சருடனும் பேச்சு நடத்திய பின்னரே ஆளுநர் மேற்படி உறுதிமொழிகளை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளுநரின் உறுதி மொழிகள் அடங்கிய பக்ஸ் கடிதம் உண்ணாவிரதிகளிடம் கையளிக்கப்பட்டது. அதனையடுத்து வடக்கு — கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜீ. கிருஷ்ணமூர்த்தி, மாகாண பொதுச் சேவைகள் அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரன், புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சின் செய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலும் நேற்று உண்ணாவிரதம்!

வவுனியா, ஜூலை 7

கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்துக்கு ஆதரவாக வவுனியாவிலும் நேற்று உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா செயலகத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் வவுனியா மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினரும், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும் இணைந்து பங்குபற்றினர்.

வவுனியா அரச அதிபர் மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், வவுனியா நகரசபைத் தலைவர் ஆகியோர் உண்ணாவிரதிகளைச் சென்று பார்த்தனர்.

மாலை 4 மணி வரை உண்ணாவிரதம் நீடித்தது. வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் உள்ள தமிழ்க் கட்சிகள் அறிக்கைகளை வெளியிட்டிருந்தன. (ஐ-9-164)

## பயணிகள் கப்பல் சேவை மேலும் தாமதமாகும்?

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணத்துக்கும் திருமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் திருமலையில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. எனினும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

முன்னர் இக்கப்பல் சேவை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச்சேவையில் ஈடுபடுத்துவதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 'டிமோகிறசி' என்ற கொரிய நாட்டுக் கப்பல் திருமலை வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பதால் கப்பல் சேவையைத் திட்டமிட்டபடி 11 ஆம் திகதி ஆரம்பிப்பது சாத்தியமில்லை என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இதற்கிடையில் —

தற்போது வடக்கே வந்துள்ள 'லங்கா முடித' வர்த்தகக் கப்பலைப் பயணிகள் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது காங்கேசன்துறையில் தரித்துள்ள இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி முடித்ததும் திருமலை சென்று ஆயிரம் பயணிகளை ஏற்றிவர ஏற்பாடு செய்யப்படவுள்ளது. (ஐ-9)

## மன்னாரில் 3 மின்மாற்றிகள் தகர்ப்பு

வவுனியா, ஜூலை 7

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள 10 ஆம் கட்டைக்கும் 12 ஆம் கட்டைக்கும் இடையில் இருந்த மூன்று மின்மாற்றிகள் நேற்று முன்தினமிரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்படும் பகுதிகளிலேயே இந்த மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன. (ஐ-164-9)

### பொலீஸாரை கண்ட பீதியில்

## இனந்தெரியாத நபர்வீசிய பையில் துப்பாக்கி மீட்பு!

கொழும்பு, கண்டி வீதியில் நித்தம்புவவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீசிவிட்டுச் சென்ற பை ஒன்றில் இருந்து 60 எம். எம். ரக துப்பாக்கி, கிரனேட் என்பன பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவ் வீதி வழியே ரோந்து சென்ற பொலீஸ் ஜீப் ஒன்றைக் கண்டதும் அந்த நபர் பையை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலீஸார் அந்த நபரைத் தேடிவருகின்றனர். (ஐ-21)

## போதை பாவிக்கும் தாயை அடித்துக் கொன்ற மகன்!

### அம்பாறையில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 7

போதைவஸ்து பாவித்த தாயாரின் போக்கு தாங்க முடியாததால் மகன் மண்வெட்டிப் பிடியால் தாயைத் தாக்கிக் கொலை செய்தான்.

இந்தச்சம்பவம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று- திருக்கோயிலில் சின்னத் தோட்டம் பகுதியில் நேற்று நிகழ்ந்தது.

வேலுப்பிள்ளை இராமையா செல்வநாயகி (வயது 35) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு மரணமானவராவர்.

வெளிநாட்டுக்குச் சென்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆபத்தான கட்டத்தை டக்ளஸ் தாண்டிவிட்டார்

## ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை களுத்துறைச் சிறையில் தமிழ்க் கைதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த டக்ளஸ் தேவானந்தா ஆபத்தான கட்டத்தை தாண்டியிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் தமது எண்ணங்களை வெளிப்படுத்தக் கூடியளவுக்கு சரளமாக உரையாடுவதாகவும்—

நீராகாரம் மற்றும் மென்மையான, உணவுகள் அவருக்கு ஊட்டப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

சிகிச்சைக்காக அவரது தலைமுடி மற்றும் தாடி என்பன மழிக்கப்பட்டுள்ளன.

அவரது வலது பக்கக்கண் பகுதியில் ஏற்பட்ட தாக்கத்தால் கண் பாதிப்புற்றுள்ளது ஒருசிறிய கண்சத்திரசிகிச்சை மூலம் அது சீர் செய்யப்பட்டு விடும் என டாக்டர்கள் தெரிவித்தனர். அவரது வலது

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழக அனுமதி:

## கவிதை, சாரணியத்துக்கு மேலதிக புள்ளிகள்

### இம்முறை இருவர் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 7

கவிதை, சாரணியம் ஆகிய இரு துறைகளில் சிறந்து விளங்கிய இரண்டு மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புக்கு விசேட அனுமதி பெற்றுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் முதல் முறையாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கவிதைத்துறையில் சிறந்து விளங்கிய ஆர். முரளீஸ்வரன் என்ற மட்டக்களப்பைச் சேர்ந்த மாணவனும், சாரணியத் துறையில் சிறந்து விளங்கிய ஜனாதிபதி சாரணியர் எஸ். ரவிசங்கர் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவனுமே இவ்வாறு விசேட அனுமதி பெற

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் தம்பையா

வேலணை வடக்கு, வேலணை 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது சென்னையை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தம்பையா 5 - 07 - 98 அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் — செல்லம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து — செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும், செல்லம்மாவின் (இராசம் — இந்தியா) அன்புக் கணவரும், புலேந்திரன் (சுவிஸ்), வாசகன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாசுகி (சுவிஸ்), யாழினி (இந்தியா) ஆகியோரின் அருமை மாமனாரும், பவித்தா, சசிக்கா (சுவிஸ்), சுபாங்கி (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசபிள்ளை அன்னலட்சுமி (பிரான்ஸ்), வேதநாயகி மகாலிங்கம், காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6 - 7 - 98 காலை 10.30 மணிக்கு சென்னையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
நா. மா. மகாலிங்கம்
(மைத்துனர்)

91, 1 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(57400)

## இளையதம்பி கதிர்காமநாதன்

(பலாலி ஆசிரிய கலாசாலை
2ஆம் வருட மாணவர் - ஆங்கிலம்)

சாமியன் அரசடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருமதி ஸ்ரீ ரஞ்சிதமணியின் கணவரும் கிருஷாந்தன், சிந்துஜா ஆகியோரின் தந்தையுமாகிய இ. கதிர்காமநாதன் 5 7-98 அன்று காலமானார்.

இவரது இறுதிச் சடங்குகள் சோனப்பு மயானத்தில் 5-7-98 இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. முருகேசு
(மைத்துனர்)

குடும்பத்தினரும், உறவினரும்
சாமியன் அரசடி
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

(C/4204)

## திருமதி சங்கரப்பிள்ளை முத்தம்மா

புளியங்கூடலைச் சேர்ந்த திருமதி சங்கரப்பிள்ளை முத்தம்மா 05. 07. 98 அன்று வண்ணார்பண்ணையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் யோகநாதன் (ஓய்வுபெற்ற மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தர் அ. வைத்தியசாலை, ஊர்காவற்றுறை), நிமலநாதன் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவநாயகி, சத்தியலட்சுமி (சாந்தி) ஆகியோரின் மாமியாரும் சிறிதரன் சிவமலர், சிவநிதி (வவுனியா கல்வியியற் கல்லூரி வவுனியா 3 ஆம் வருடம்), சிவயோகராஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), திவாகரன், சிந்துஜா, இந்துஜா ஆகியோரின் பேர்த்தியும், யதுகுலனின் அன்புப்பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06 07. 98 இல் 13[2 துரைராஜா வீதி, வண்ணார் பண்ணையில் நடைபெற்று, கோம்பயன் மணல் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச யோகநாதன்
(மகன்)

(57388)

## திருமதி திரவியரத்தினம் சிதம்பரப்பிள்ளை

உடுவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி திரவியரத்தினம் சிதம்பரப்பிள்ளை 05 — 07 — 98 இல் திருகோணமலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியர் கதிரேசு சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், கணேசன் (உப செயலாளர், இலங்கைசெஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை, உரிமையாளர் மக்சல் கவுஸ் யாழ்ப்பாணம்), டொக்டர் ஞானச்சந்திரன் (பிரதிப் பணிப்பாளர், வடக்கு—கிழக்கு மாகாணசபை, விவசாயத் திணைக்களம், திருகோணமலை), உதயபாலன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), மகேந்திரன் (கனடா), மகாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாரஞ்சிதம் (இளைப்பாறிய ஆசிரியர், அல்லாரை அ. த. க. பா.), கனகேஸ்வரி, சுசிலாதேவி, பவானி (கனடா), சிவகுமார் (கனடா) ஆகியோரின் மாமியாரும், சியாமா, திவாகர், சுஜானி, கார்த்திக்கோயன், கோபி கிருஸ்ணா, குருபவன், மயூரி, மயூரன், சிந்துஜா, அபிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06 — 07 — 1998 திங்கட்கிழமை மாலை 4. 00 மணிக்கு திருகோணமலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சி. கணேசன்
(மகன்)
மில் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

சி. உதயபாலன்
(மகன்)
''மலர் வாசா''
டச்சு றோட்,
உடுவில்.

(57401)

# குடாநாட்டிலும் வாந்திபேதி பரவலாம் என எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஜூலை 7

வாந்திபேதி நோயானது (கொலரா) குடாநாட்டிலும் பரவக்கூடிய அபாயம் உள்ளதால் இந் நோய்க்கெதிரான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதம் யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களில் அண்மைக்காலமாக வாந்திபேதி நோய் பரவி வருகிறது. இந்த நோய் எமது பகுதியிலும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால் அதனைத் தடுக்கும் நடவடிக்கையில் உடனடியாக ஈடுபட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலுள்ள உணவு நிலையங்களில் சுகாதாரம் பேணப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். சுகாதாரம் பேணப்படாத உணவு நிலையங்களுக்குஎதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வாந்திபேதி நோயைத் தடுக்கும் விதத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு சுகாதாரக் கல்வி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துமாறு சகல சுகாதார உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் அவர் பணித்துள்ளார்.

(ஐ-5-6)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவனத்திற்கு உதவி விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான அனுமதிக் கடிதங்கள் நேற்று திருநெல்வேலியிலுள்ள உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு வந்து சேர்ந்தன; உரியவர்கள் கல்லூரி நேரத்தில் வந்து கடிதங்களை பெற்றுக் கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்
ரஜனி - பிரபு - ராதா
நடித்த
தர்மத்தின் தலைவன்

புதன், வியாழன்
விஜயகாந்த் - ராதிகா
நடித்த
கரிமேடு கரிவாயன்

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223

(57309)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கடைசி வாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா

அடுத்த வெளியீடு!
10 ஆம் திகதி முதல்
சத்ரிய வம்சம்
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4203)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.

அகல வெண் திரையில்
07-07-98 செவ்வாய் முதல்
விஜயகாந்த் - ரேவதி
முரளி நடித்த
என் ஆசை மச்சான்
CD வெளியீடு
காட்சிகள்:- 10-30, 2-30

(57408)

## சிவா திரையில்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சரத்குமார் - சிம்ரான்
நடித்த
[illegible]
(புதிய வெளியீடு)
தினசரி:- 10-30, 2-30

(57414)

பருத்தித்துறை தம்பசிட்டி
வாணர்குடியிருப்பு இளைஞர் வி. கழகத்தின்

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு 3653 2 ஆம் பரிசு 2487
3 ஆம் பரிசு 4145
3363, 2954, 1976, 2677, 3654.

குறிப்பு: அதிர்ஷ்டசாலிகள் பற்றுச்சீட்டுடன் பரிசுகளை எதிர்வரும் 15 - 07 - 98க்கு முன்னர் கழகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

நன்றி!

(57405) - செயலாளர்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

### கலைப்பீடத் தேர்வுகள் - 1996

(கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல் மாணி தகுதிகாண் தேர்வுகள் 1996)

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

| பரீட்சைகள் | தொடங்கும் திகதி | முடியும் திகதி |
|---|---|---|
| 1. முதலாம் ஆண்டு கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம் | 13-07-98 | 25-07-98 |
| 2. பகுதி I பகுதி II மீள் பரீட்சை (ஆங்கிலம் இரண்டாம்மொழி) கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம் | 03-08-98 | 04-08-98 |
| 3. இரண்டாம் ஆண்டு பகுதி - I கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல் மாணி - தகுதிகாண் பரீட்சை | 21-09-98 | 06-10-98 |
| 4. மூன்றாம் ஆண்டு பகுதி - II கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல் மாணி - தகுதிகாண் பரீட்சை | 20-10-98 | 02-11-98 |
| 5. நான்காம் ஆண்டு பகுதி - III கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல் மாணி - தகுதிகாண் பரீட்சை | 16-11-98 | 07-12-98 |

— பதிவாளர்.

(சி/4208)

# மரண அறிவித்தல்

## வினாசித்தம்பி குமாரசாமி

சரசாலை தெற்கு, மெய்கண்டான் வீதியைச் சேர்ந்த வினாசித்தம்பி குமாரசாமி 06-07-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மெய்கண்டான் வினாசித்தம்பி - இராசம்மா ஆகியோரின் இளைய மகனும், திருமதி சோ. மகேஸ்வரி, திருமதி க. அமிர்தவல்லி, திருமதி த. குணபூசணம், திருமதி சி. அன்னலக்ஷ்மி, காலஞ்சென்றவர்களான ஆறுமுக நயினார், குணபதி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (6-7-98) வேம்பிராய் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. க. கனகரத்தினம்
(மைத்துனர்)

(சி/4210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா - வாஜ்பாய் விரைவில் சந்தித்து பேச்சு!

## நெருக்கடிகளுக்கு தீர்வுகாண முயற்சி

புதுடில்லி, ஜூலை 7

இந்தியப் பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாயும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் விரைவில் சந்தித்துப் பேசி பாரதீய ஜனதா கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண முயற்சிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பாரதீய ஜனதா அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறுவதில்லை என்று அ.தி.மு.க. முடிவு செய்தது தெரிந்ததே.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சென்னை வந்து ஜெயலலிதாவைச் சந்தித்து பேச்சு நடத்தியதை அடுத்து பாரதீய ஜனதாவுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறுவதில்லை என்ற முடிவை அ.தி.மு.க. எடுத்தது.

சென்னையில் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசிய பின்னர் டில்லி திரும்பிய ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று முன தினம் வாஜ்பாயுடன் பேச்சு நடத்தினார்.

இதனை அடுத்தே வாஜ்பாயும் ஜெயலலிதாவும் சந்தித்துப்பேச இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 27 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற பாரதீய ஜனதாக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஜெயலலிதா கலந்து கொள்ளாததை அடுத்து கூட்டணிக்குள் ஏற்பட்ட நெருக்கடி ஜெயலலிதா — ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சந்திப்பை அடுத்து தணிந்துள்ளது. வாஜ்பாய்—ஜெயலலிதா சந்திப்பு இந்த நெருக்கடி மேலும் தளர உதவலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம் அரசமைப்புச் சட்டத்தின் 356 பிரிவு அற்ப காரணங்களையெல்லாம் கருத்தில் எடுத்துக் கொண்டு துஷ்பிரயோகம் செய்ய உருவாக்கப்படவில்லை என்று பாரதீயஜனதாக்கட்சித்தலைவர் குஸ்பாவே தாக்கரே தெரிவித்துள்ளார்.

356 பிரிவை துஷ்பிரயோகம் செய்ததனால் பாரதீய ஜனதாக் கட்சி பல முறை பாதிப்புக்குள்ளாகியுள்ளது.கர்நாடகத்தில் முன்னர் எஸ்.ஆர். பொம்மையின் அரசும் பாதிப்புக்குள்ளானது.

எனவே வாஜ்பாய் அரசு இது விடயத்தில் மிகுந்த கவனத்துடனும் முன்னேற்பாட்டுடனும் செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-ரி)

## ம. தி. மு. க. உறுதிக்கு கருணாநிதி பாராட்டு

சென்னை, ஜூலை 7

தி. மு. க. ஆட்சியைக் கலைக்க 356 ஆவது பிரிவைப் பயன்படுத்துவதை எதிர்ப்பதில் மறுமலர்ச்சி தி. மு. க. காட்டும் உறுதியை நான் பாராட்டுகின்றேன்''

இப்படி கருணாநிதி கூறினார்.

இது பற்றி செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி விவரம்:

கேள்வி: டில்லியில் மாறனும் வை.கோவும் சந்தித்தார்களா?

பதில்: சந்திப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? (சிரிப்புடன்) இதெல்லாம் அரசியல் நாகரிகம். ஆங்காங்கே சந்திக்கும் போது நலம் விசாரிப்பதும் பேசிக்கொள்வதும் தவறல்ல.

கேள்வி: அரசியல் பேசினார்களா?

பதில்: அப்படிப்பட்ட செய்தி வரவில்லை,

கேள்வி: 356ஆவது பிரிவைப் பயன்படுத்துவதை எதிர்ப்பதில் ம. தி. மு. க. உறுதியாக இருக்கிறதே?

பதில்: இந்த உறுதியை நான் பாராட்டுகிறேன். (இ-10)

## தனுஷ்கோடி வந்த ஈழத்தமிழர்

சென்னை, ஜூலை 7

பத்துக் குடும்பங்களைச் சேர்ந்த 24 இலங்கைத் தமிழர்கள் தலை மன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் தனுஷ் கோடி பொலீஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-ரீ)




## உலகக் கிண்ணத் துணுக்குகள்

### 52 ஆவது விநாடியில் கோல் அடித்தவர்

பிறேசில், ஜூலை 7

பரகுவே வீரர் செல்சா ஆயலாவுக்கு தங்கக் கடிகாரம் பரிசாக வழங்கப்பட்டது. அதி விரைவில் கோல் அடித்ததற்காக இந்தப் பரிசு அவருக்கு கிடைத்தது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற நைஜீரியாவுக்கு எதிரான போட்டியில் ஆட்டம் துவங்கி 52 ஆவது விநாடியிலேயே அவர் தனது அணிக்கான முதல் கோலை அடித்தார். இந்த உலகக் கிண்ணப் போட்டியில் மிக விரைவில் அடிக்கப்பட்ட முதல் கோல் இது ஆகும். இதேவேளை உலகக் கிண்ண வரலாற்றில் அதி விரைவில் அடிக்கப்பட்ட நான்காவது கோலும் இதுவே.

1962 இல் மெக்சிக்கோவுக்கு எதிரான போட்டியில் செக்கோஸ்லாவிய வீரர் ''வாக்லோவ் மாரெர்'' ஆட்டம் தொடங்கி 15 ஆவது விநாடியில் கோல் அடித்தார்.

1982 ஆம் ஆண்டுப் போட்டியில் இங்கிலாந்து வீரர் ''பைரன் ராப்சன்'' பிரான்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் 27 ஆவது விநாடியில் கோல் அடித்தார்.

1978 இல் பிரான்ஸ் வீரர் ''பெர்னார்ட் லகோம்பே'' இத்தாலிக்கு எதிரான போட்டியில் 37 ஆவது விநாடியில் கோல் அடித்தார்.

உலகக் கால்பந்து சம்மேளனத்தின் சார்பில் அதி விரைவில் கோல் அடிக்கும் வீரருக்கு சுவிட்சர்லாந்து தயாரிப்பான தங்கக் கைக்கடிகாரம் வழங்கப்படுகிறது. (இ-ரி)

### அமெரிக்கா ''சாதனை''

''எங்கள் அணி புள்ளி எதையும் பெறாத நிலையிலும் உலகின் மிகப்பெரிய அணிகளோடு விளையாடியதே பெருமை'' என்று அமெரிக்க அணியின் பயிற்சியாளர் ஸ்டீவ் சாம்சன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா முதல் சுற்றில் மூன்று ஆட்டங்களிலும் தோல்வியுற்றது. மேலும் அது ஒரே ஒரு கோல் தான் அடித்துள்ளது.

உலகக் கோப்பைக்கு தகுதி பெற்று வல்லமை மிகுந்த பெரிய அணிகளோடு விளையாடும் அளவுக்கு முன்னேறியுள்ளதே பெரிய சாதனைதான் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார் சாம்சன். (இ-10)

### மது போத்தல்களை வீசி ரசிகர்கள் கலாட்டா

பிரான்ஸ், ஜூலை 7

ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து 3-4 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது.

இதையடுத்து ஷர்ன் எதியோன என்ற இடத்தில் உள்ள மதுக்கடையில் அமர்ந்து தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்த தென் ஆபிரிக்க இளைஞர்கள் ஆர்ஜென்டீனாவுக்கு ஆதரவாக குரல் எழுப்பி நடனமாடினார்கள்

இதனால் கோபமுற்ற அங்கிருந்த இங்கிலாந்து ரசிகர்கள் தென் ஆபிரிக்க இளைஞர்களுடன் மோதலில்ஈடுபட்டனர்,மது போத்தல்களை தாராளமாக அவர்கள் மீது சினர்.

இதனை அடுத்து பொலீஸார் இங்கிலாந்து ரசிகர்களைக் கைது செய்தனர். (இ-ரி)

### 3 ரசிகர்கள் பலி!

பிரேசில், ஜூலை 7

ஆர்ஜென்டீனா உதைபந்தாட்ட ரசிகர்களை ஏற்றிச் சென்ற லொறியுடன் ரயில் மோதியதில் 3 ரசிகர்கள் உயிர் இழந்ததுடன் 30 பேர் வரை காயமடைந்தனர். (இ-ரி)

## சிறப்பு நீதிமன்றம் அமைத்ததை எதிர்த்து

# ஜெயலலிதா தாக்கல் செய்த வழக்கு 14 ஆம் திகதி முதல் மீண்டும் விசாரணை

சென்னை, ஜூலை 7

அ. தி. மு. க. ஆட்சியில் நடைபெற்ற ஊழல் குறித்த வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டதை எதிர்த்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தாக்கல் செய்த வழக்கை இம்மாதம் 14 ஆம் திகதியிலிருந்து சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் விசாரிக்க உள்ளது.

தலைமைநீதிபதி எம். எஸ். லிபரான் நீதிபதி கோவிந்தராஜன் ஆகியோர் இவ்வழக்கை விசாரிப்பர்.

இவ்வழக்கை தலைமை நீதிபதி எம்.எஸ். லிபரான், நீதிபதி டிராஜு ஆகியோர் கடந்த பெப்ரவரி மாதத்திலேயே விசாரித்து முடித்தனர். தீர்ப்பு பின்னர் வெளியிடப்படும் என்று கூறினர். 4 மாதங்களுக்கு மேலாகியும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

இதனிடையே நீதிபதி டிராஜு ஹிமாசலப் பிரதேசத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். எனவே தற்போது மீண்டும் அந்த வழக்கை விசாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தலைமைநீதிபதி எம்.எஸ். லிபரானும், நீதிபதிகோவிந்தராஜனும் இம்மாதம் 14 ஆம் திகதி விசாரணையைத் தொடங்குவர்.

ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் அன்றைய தினம் வாதிடுவார். 22 ஆம் திகதி அரசுத் தரப்பு வழக்கறிஞர் வாதிடுவார். 29 ஆம் திகதி இருதரப்பினரும் பதில் வாதத்தில் ஈடுபடுவர்.

தலைமை நீதிபதி இத்தகவலை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார். அப்போது ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் ஜீனசேனன், அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஜி.மாசிலாமணி ஆகியோரும் இருந்தனர்.

மூத்த வழக்கறிஞர்களை இவ்வழக்குக்காக நியமிக்க வேண்டியுள்ளது. எனவே 14 ஆம் திகதிக்குப் பதிலாக வேறு திகதிக்கு தள்ளி வைக்க வேண்டும் என்று ஜெயலலிதாவின் வழக்கறிஞர் ஜீனசேனன் கோரினார்.

ஆனால் விசாரணையை 15 நிமிடம் கூட தள்ளி வைக்க முடியாது என்று தலைமை நீதிபதி கூறினார்.

ஊழல் குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா முன்னாள் அமைச்சர்கள் செல்வகணபதி, கண்ணப்பன், இந்திரகுமாரி உட்பட 18 பேர் சிறப்பு நீதிமன்றத்தை எதிர்த்து மனுத்தாக்கல் செய்துள்ளனர். (இ-10)

## உலக அரங்கில்

### பாகிஸ்தான் கண்டனம்

இஸ்லாமாபாத், ஜூலை 7

பாகிஸ்தான் விஞ்ஞானிகள் அமெரிக்காவில் சரணடைந்துள்ளதாக மேற்குலக செய்தி நிறுவனங்களால் பரப்பப்படும் செய்திகளுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

''ஐரோப்பிய செய்தி ஸ்தாபனங்கள் திட்டமிட்டு இச் செய்திகளைப் பரப்பி வருகின்றன'' என்று பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜப்பானில் தேர்தல் பிரசாரம் தீவிரம்!

ரோக்கியோ, ஜூலை 7

ஜப்பானில் தேர்தல் பிரசாரம் மும்முரமாக நடைபெறுகின்றது.

ஜப்பானின் மேற்சபையின் மொத்தம் 252 ஆசனங்களில் அரைவாசி ஆசனங்களுக்கான தேர்தலே இன்னும் ஒரு வாரத்தில் நடைபெறவுள்ளது.

தொகுதி ரீதியாக 76 ஆசனங்களுக்கு 316 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மிகுதிப் பிரதிநிதிகள் விகிதாசாரப் பிரதிநிதித்துவப்படி தெரிவு செய்யப்படுவர்.

14 கட்சிகள் மற்றும் குழுக்கள் சார்பில் 158 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

ரோக்கியோ தேர்தல் தொகுதியில் கடும் போட்டி நிலவுகிறது. 25 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். (இ-ரி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாணவர் உட்பட 396 பேர் மீது சுழிபுரத்தில் தொழுநோய் ஆய்வு

## நால்வருக்கு நோய் அறிகுறி கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

பொது சுகாதார பரிசோதக பயிலுனர்கள் அண்மையில் சுழிபுரப் பகுதியில் தொழுநோய் பற்றிய ஆய்வினை மேற்கொண்டனர்.

அப் பகுதியைச் சேர்ந்த 210 பொதுமக்களும், 186 பாடசாலை மாணவர்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தொழுநோய் பற்றிய கருத்தரங்கும் நடைபெற்றது.

புதிதாக நான்கு பேர் தொழுநோயால் பீடிக்கப்பட்டமை கண்டறியப்பட்டு உடனடியாக தொழுநோய் சுகாதாரப் பரிசோதகரிடம் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.

இப் பகுதியில் தொழுநோய் பல வருடங்களாக தொடர்ந்து காணப்பட்டு வருகின்றது, இப்பகுதி மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி இன்மையும், சீரான, வசதியான இருப்பிட மின்மையுமே இதற்கு காரணமாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இம் மக்களுக்கான சுகாதார, இருப்பிட வசதிகள் கிடைப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் எனவும்— இப்பகுதி மக்களின் வருமானத்தை உயர்த்துவதில் அக்கறை செலுத்தப்பட வேண்டும் என்றும்— கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

(இ-ரி)

---

# சின்னஞ்சிறு விளம்பரம்

### நூல்

பொது அறிவுப் பூங்கா நூல் வெளிவந்து விட்டது. மாணவர் புலமைப் பரிசில் தேர்வுகள், பொதுப் பரீட்சைகள் போன்றவற்றிற்கும், அறிவை வளர்க்கவும் உபயோகமானது. தொகுப்பாசிரியர் ஆ. சண்முகலிங்கம், விலை ரூபா 33. எங்கும் கிடைக்கும். 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[57298]

### கலர் மீனகள

பல இன கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. ஐ. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை. (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் ஒழுங்கை) பார்வையிடும் நேரம், நண்பகல் 12 மணிக்குப் பின்.

[57353]

### தவறிவிட்டது

பாலசிங்கம் நிரஞ்சன், சம்பியன்ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்பவரது விசேட அடையாள அட்டை கொக்குவிலுக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரிக்கோ அல்லது யாழ். லிங்கன் கூல் பாரிலோ ஒப்படைக்கவும்.

[57382]

---

# கட்டாக்காலிகள் தொல்லை

சுன்னாகம், ஜூலை 7

தெல்லிப்பழை அம்பனை வயல் வெளிப் பிரதேசத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நீண்ட காலத்தின் பின்னர் இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட சில இடங்களில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(இ-5-27)

# வவுனியாவுக்கு புதிதாக 3,000 தொலைபேசிகள்

## திட்டம் அங்குரார்ப்பணம்

வவுனியா, ஜூலை 7

நாடெங்கும் ஒருலட்சத்து 50 ஆயிரம் தொலைபேசி வசதிகளை அளிக்கும் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் அமுல் செய்யப்படவிருக்கும் 3 ஆயிரம் தொலைபேசி வசதி வழங்கும் திட்டம் நாளை அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

வெளிநாட்டு நிறுவனமான எரிக்சன் அமைப்பினால் மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டம் வருட இறுதிக்குள் முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## புதிய விதிகளுக்கு அமைய

# கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக்குழுத் தேர்தல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட விதிகளுக்கமைய கூட்டுறவுச்சங்க கிளைக்குழுத் தேர்தல்கள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 18 ஆம் திகதி பருத்தித்துறை ப. நோ. கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கிடையிலான கூட்டங்கள் கூட்டுறவு உதவி ஆணையாளரால் கூட்டப்படவுள்ளன.

இக் கூட்டங்களில் அந்தந்த கிளைக் குழுக்களின் தெரிவும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க கூட்டம் இம்மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (இ-5)

---


அராலி வடக்கு கோணாவில்
பெரியதம்பிரான் ஆலய நிதிக்காக
நடைபெற்ற

**சீட்டிழுப்பு முடிவுகள்**

05 - 07 - 98 அன்று மாலை 4. 00 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.

1 ஆம் பரிசு — இலக்கம் 228
2 ஆம் பரிசு — இலக்கம் 235
3 ஆம் பரிசு — இலக்கம் 1922

ஆறுதல் பரிசு இலக்கங்கள்: 229, 237, 2996, 564

ஆதரவு தந்த அனைவருக்கும் நன்றி.

(57385) - நிர்வாகம்


---


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்**

இகத்தில் 23 — 13 — 1919



பரத்தில் 08 — 06 — 1998

திருமதி

**சின்னத்துரை நவமணி**

31ஆம் நாளாகிய நாளை (08 – 07 – 98) புதன்கிழமை வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிரியை நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

த. செல்லத்துரை,
கைதடி வடக்கு,
கைதடி.


---

# தொலைபேசி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரிக்கு தொலைபேசி வசதி செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தொலை பேசிவசதிகள் வழங்கப்படுமானால் தொழில் நுட்பக்கல்லூரியின் தேவைகள் குறித்தும் செயற்பாடுகள் குறித்தும் உயர் அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்கும் என தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

(இ-5-7)

# தொழில் நுட்ப நிறுவனத்துக்கு காணி

யாழ்ப்பாணம் ஜூலை7

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்காக 10 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்காகபல இடங்களில் காணிகள் பார்வையிடப்பட்டுள்ளதாகவும் —

காணி ஒன்றைத் தெரிவு செய்யும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் — தொழில்நுட்ப நிறுவனப்பணிப்பாளர்ரி.ராஜரத்தினம் தெரிவித்தார்.

(இ - 5 - 6)

# இடமாற்றம்

நெல்லியடி, ஜூலை 7

வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்தில் பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளராகப் பணிபுரிந்து வந்த எஸ்.குமாரசாமி வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு கடந்த மாதம் 5 திகதி தொடக்கம் இடமாற்றம் பெற்றுள்ளார்.

இதே வேளை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளராகப் பணிபுரிந்த எஸ். ஆர். குணரத்தினம், கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(இ-5-10)

---

# சமூக சேவை அலுவலர் மூலம் உதவி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை7

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களில் முச்சக்கர வண்டிகள், மூக்கு கண்ணாடிகள், காதுகேட்கும் கருவிகள் தேவையானோருக்கு அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு மேற்படி பொருள்களை பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் இந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாக 255 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இவர்களில் 5 பேருக்கு தொழிலை மேம்படுத்துவதற்கென 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. ஏனையவர்களுக்கு படிப்படியாக நிதி உதவிகள் வழங்கப்படவிருப்பதாக சமூக சேவை திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-5)

# 'கிறீன் குறொஸ்' கிளையை குடாநாட்டில்நிறுவஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடனும் இயற்கையோடு உள்ள சம்பந்தம் குறித்து உலக மக்களை ஆழ்ந்து சிந்திக்கவும் செயற்படவும் தூண்டும் இலக்குடனும் இயங்கும் சர்வதேச நிறுவனமான ''கிறீன் குறொஸ்'' (Green Cross) நிறுவனத்தின் வட பிராந்தியக் கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சர்வதேச சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனமான ''கிறீன் குறொஸின்'' தேசியக் கிளை கொழும்பில் கடந்த ஜனவரி மாதத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதன் பெரும் போஷகராக ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட போஷகர்களாக பிரதம மந்திரியும், எதிர்க்கட்சித் தலைவரும் விளங்குகிறார்கள்.

தேசியக் கிளையின் இரு பிராந்தியக் கிளைகளை மேற்கிலும், வடக்கிலும் நிறுவுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக தலைவரும், தேசிய இணைப்பாளருமான கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் தெரிவித்தார்.

உலகின் பல நாடுகளிலும் தேசியக் கிளைகளைக் கொண்டுள்ள ''கிறீன் குறொஸ்'' 1993 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் தலைவர் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி மைக்கேல் கோர்பச்சேவ் ஆவார்.

தென்னாசியப் பிராந்திய நாடுகளில் நிறுவப்பட்ட ''கிறீன் குறொஸ்'' அமைப்புகளில் இலங்கைக் கிளை முன்னணி வகித்து வருகிறது.

# இடம்பெயர்ந்த ஆசிரியர் பிரச்சினை பற்றி பேசுவார்

வவுனியா, ஜூலை 7

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக புளொட் அமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் கல்வி, உயர்கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு முழுமையாகச் சம்பளம் கிடைப்பதில்லை என்றும்—

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் தமக்கு வழங்கப்படுவதில்லை என்றும்— இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அவரிடம் முறையிட்டனர்.

அதைத் தொடர்ந்தே அவர் கல்வியமைச்சருடன் பேசவிருக்கிறார்.

(இ-164-3)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

மாவட்ட விளையாட்டு அலுவலர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இம் மாதம் 14 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது,

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் கலாநிதி எண். எதிர்வீரசிங்கம் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளார். (இ-ரீ)

# பாட்டுக் கச்சேரி

கல்விப்பணிப்பாளர் சங்கீதபூசணம் எம். கணபதிப்பிள்ளை வீரமணிஐயர் இயற்றிய வழக்கம்பரை அம்பாள் பாடல்களை பாடும் பாட்டுக் கச்சேரி இன்று செவ்வாய்க்கிழமை மாலை வழக்கம்பரை அம்பாள் ஆலய முன்பாக நடைபெறவுள்ளது.

இப்பாடல்களை நூல் வடிவில் இந்தியாவில் இருந்து அச்சிட்டு வெளியிட வேண்டிய ஒழுங்குகளை சு. சுந்தரராசக்குருக்கள் செய்து வருகின்றார். (இ-5-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

### அதிபர் நியமனம்

தென்மராட்சி, ஜூலை 7

பளை மத்திய கல்லூரியின் புதிய அதிபராக கல்லூரியின் பிரதிஅதிபராகக் கடமையாற்றிய க. குணபாலசிங்கம் வடக்கு–கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக பளைக் கோட்டக் கல்வி அலுவலர் அ. கைலாயபிள்ளையே கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-711)

### 'பிக்கப்' வாகனம்

வட்டுக்கோட்டை, ஜூலை 7

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளரின அலுவலக கடமைகளுக்காக புதிய 'பிக்கப்' வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. வலிகாமம் மேற்கு பிரதேச செயலரின் பாவனைக்கு வாரத்தில் மூன்று தினங்களும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலரின் பாவனைக்கு மூன்று நாள்களும் என்ற அடிப்படையில் இவ்வாகனம் பயன்படுத்தப்படும். (ஐ-12)

### குருளைச் சாரணர் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் குருளைச்சாரணர் விழா உதவி மாவட்ட குருளைச் சாரணர் தலைவர் திருமதி சச்சிதானந்த தாஸ் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் குருளைச் சாரணர் ஆசிரியர்கள் செல்வி என். ரஞ்சிதமலர், செல்வி என். பிரதா ஆகியோர் குருளைச் சாரணர்களுக்குச் சின்னம் சூட்டிவைத்தனர். (ஐ-ரீ)

### இலவச தையற் பயிற்சி

சண்டிலிப்பாய், ஜூலை 7

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் மேற்கு கிளை யுவதிகளின் நலன்கருதி இலவச தையற் பயிற்சி நெறியொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

வட்டுக்கோட்டை சங்கரத்தையிலுள்ள பிரிவு கிளை அலுவலக கட்டடத்தில் இப்பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளதாக கிளையின் செயலாளர் இ. கனகராசா தெரிவித்தார். (ஐ-135)

### சிரமதானம்

சுழிபுரம், ஜூலை 7

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவ மாணவிகள் வழக்கம்பரை அம்பாள் ஆலய வீதிகளைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். வீதியில் உள்ள முள், கற்கள், புல் பூண்டுகள் யாவும் சுத்தம் செய்யப்பட்டன. (ஐ-28)

### இடர் காலக் கொடுப்பனவு

வடமராட்சி ஜூலை 7

கோப்பாய் பிரதேச செயலகத்தில் மாகாண சபையின் கீழ்பணியாற்றும் ஊழியர்களுக்கு இடர் காலக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இச் செயலகத்தில் மத்திய அரசின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இடர்கால கொடுப்பனவு வழங்குவதற்காகக் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (இ 5 – 173)

### வீதி திருத்தம்

வலி.தென்மேற்கு ஜூலை7

நீண்டகால இடைவெளிகளின் பின்னர் நவாலி – வழுக்கையாறு பிரதான வீதி திருத்தப்பட்டு வருகிறது.

இதே வேளை நவாலி, சோமசுந்தரப்புலவர்வீதி– கல்ஒழுங்கையில் பாரிய குண்டும் குழியுமாக இருப்பதனால் விவசாயிகள், பாதசாரிகள் செல்வது பெரும் சிரமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ 5 – 185)

### தளபாடங்கள் வந்தன

குருநகர், ஜூலை 7

தேசிய பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக ஒரு தொகுதி மாணவர் மேசை, கதிரைகள், மற்றும் சொகுசு கதிரைகள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ–51)

### பழுதடைந்தவாகனம் அனுப்பப்பட்டது

நெல்லியடி, ஜூலை 7

கொழும்பில் பாவிக்கப்பட்ட, பழுதடைந்த பிக் அப் வாகனம் ஒன்று வடமராட்சிப் பகுதியிலுள்ள இரு பிரதேச செயலர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த பிக் அப் வாகனத்துடன் கொண்டு வரப்பட்ட மற்றொரு புதிய வாகனம் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. (இ–5–109)

### அறநெறி பாடசாலை

தென்மராட்சி, ஜூலை 7

பளை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த முகாவில் பகுதியில் இந்து அறநெறிப் பாடசாலை அண்மையில் ஜீ.ரி.சற் நிறுவன சமூக சேவைகள் பிரிவைச் சேர்ந்த திருமதி பொன்மலர் இராஜேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த விழாவில் பளைப் பிரதேச செயலர் சு, புத்திசிகாமணி, பளைக் கோட்டக் கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ–5–117)

### சுகாதாரப் பயிற்சி

வலி. தெற்கு, ஜூலை 7

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஐந்து நாள்கள் சுகாதார தொண்டர்களுக்கான சிறப்புப்பயிற்சி வழங்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பகுதிகளில் உள்ள 55 சுகாதார தொண்டர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். (இ–5–152)

### சீரற்ற பஸ் சேவை

யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து அராலி வடக்கு, செட்டியார் மடம், வட்டுக்கோட்டை ஊடாக நடைபெறும் பஸ் சேவை சீரற்ற முறையில் நடைபெறுவதாகவும் இதனால் இப்பகுதி மக்கள் போக்குவரத்துக்கு மிகுந்த சிரமமடைவதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே இப் பாதை வழியாக பஸ் செல்வதாகவும், சில தினங்களில் இதுவும் முற்றாக நடைபெறுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ–5–135)

# இரு சபைகளைத் தவிர ஏனையவை முழுமையாக இயங்க முடியாத நிலை

## எனினும் பதவியேற்ற உறுப்பினருக்குச் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். மாவட்டத்தில் யாழ்.மாநகர சபை தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி சபைகளில் பதவி ஏற்றுள்ள 80 உறுப்பினர்களுக்கான ஜூன் மாதச் சம்பளமாக 3 லட்சத்து 5 ஆயித்து 90 ரூபா உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இந்த உள்ளூராட்சி சபைகளில் யாழ். மாநகரசபை, பருத்தித்துறை நகர சபை ஆகியன தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி சபைகள் எதுவும் இதுவரை முழுமையாக இயங்கவில்லை.

சாவகச்சேரி நகரசபை, வல்வெட்டித்துறை நகர சபை போன்றவற்றில் தலைவர், உபதலைவர் எவரும் இது வரை பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதேபோல் வலி. கிழக்கு, வலி. தென்மேற்கு, பருத்தித்துறை பிரதேச சபைகளிலும் தலைவர், உபதலைவர் பதவி ஏற்கவில்லை.

வலி. தெற்கு நல்லூர், வலி. மேற்கு பிரதேச சபைகளில் தலைவர், உப தலைவர் பதவி ஏற்றும் அங்கத்தவர்கள் பதவி ஏற்காத காரணத்தினால் சபைக் கூட்டங்களை நடத்த முடியவில்லை.

பச்சிலைப்பள்ளி (பளை), வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற பிரதேச சபைகளில் தலைவர், உப தலைவர், அங்கத்தவர்கள் பதவி ஏற்றபோதும் சபைக் கூட்டங்கள் எதுவும் இதுவரையும் கூட்டப்படவில்லை.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக் கூட்டத்துக்கு இரு தடவைகள் ஏற்பாடு செய்யப்பட்டபோதும் கோரமின்மையால் கூட்டத்தை நடத்த முடியவில்லை.

வலி. வடக்கு பிரதேச சபை சிறிது காலம் இயங்கிய போதும் தற்போது சகல நடவடிக்கைகளையும் இடை நிறுத்திக் கொண்டுள்ளது.

15 உள்ளூராட்சி சபைகளும் தமது நடவடிக்கைகள் எதனையும் ஆரம்பிக்காத போதும் பதவி ஏற்ற உறுப்பினர்களுக்கான சம்பளம் ஒழுங்காக வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (இ–5–6)

### சீட்டிழுப்பு

திருநெல்வேலி, ஜூலை7

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி பிரதம அதிதியாக கலந்து கொள்வார். யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை, யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (இ–5–135)

### வீட்டுத்தோட்டப் போட்டியில் பரிசு

யாழ்ப்பாணம், ஜூலை 7

கைதடியில் 6 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில் நடத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் கைதடி மத்தி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த திருமதி ப. மயில்வாகனம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான பரிசு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது. (இ-5)

### சிரமதானம்

வலி. வடக்கு, ஜூலை 7

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் திருமதி ப. திலகநாயகம் போல் மல்லாகம், தெல்லிப்பழை இராணுவப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-86)

### கவனிப்பாரற்ற நிலையில் மயானம்

வலிகாமம்தெற்கு, ஜூலை 7

மானிப்பாயில் அமைந்துள்ள பொது மயானமான பிப்பிலி சுடலை நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாமையால் பிரேதத்தை தகனம் செய்யச் செல்வோர் பெரிதும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள இப்பொது மயானத்தின் வடக்குப்பகுதி முழுவதும் முட்செடிகள், பற்றைகள் வளர்ந்து கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. (இ-5-152)

### மின் பாவனையாளர் அதிருப்தி

நெல்லியடி, ஜூலை 7

வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்வெட்டித்துறை, கம்பர்மலைப் பகுதிகளில் மூன்று நாள்களுக்கு ஒரு தடவை மின்சாரவிநியோகம் வழங்கப்பட்டு வருவதனால் அங்குள்ள மின்பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கம்பர்மலை வன்னிச்சி அம்மன் ஆலயப் பகுதியிலிருக்கும் ஜெனரேற்றரிலிருந்தே இங்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (இ–5-109)

# அத்தியாவசிய மருந்துக்கு நெடுந்தீவில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து வகைகள் இன்மையால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்புத் தடை மருந்து, பனடோல், குழுக்கோஸ், சேலைன் ஏற்றும் ரியூப், தொய்வு நோய்க்கு நரம்பில் ஏற்றும் மருந்து என்பன தம்வசம் இல்லை எனவும் —

ஆறு மாதங்களாகியும் ஒரு கந்தாயம் மருந்து மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் —

குறிப்பிட்ட மருந்துகளை எடுத்து வருவதற்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அனுமதி கிடைக்காததால் ஊர்காவற்றுறையில் இருந்து மருந்துகளை எடுத்து வர முடியாதிருப்பதாகவும்— ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–5–111)

### தமிழ்த் தின விழாவில்

# யாழ். பாடசாலைகளுக்கு நான்கு இடங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அகில இலங்கைத் தமிழ்த் தினவிழாவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு நான்கு இடங்கள் கிடைத்துள்ளன.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடந்த அகில இலங்கைத் தமிழ்த் தினவிழாப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 3 பாடசாலைகள் மட்டுமே பங்குபற்றின.

திருமலையில் நடந்த மாகாணப் போட்டிகளில் பங்குபற்ற யாழ். மாவட்ட மாணவர்களுக்கு வசதி கிடைக்காத காரணத்தால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட சில போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களே அகில இலங்கைப் போட்டியில் பங்குபற்றினர்.

யாழ். மாவட்ட மாணவர்கள் பெற்ற இடங்கள் வருமாறு:

★ குறுநாடகப் பிரதியாக்கம் — முதலாம் இடம் ம. பிரவீணன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

★ சிறுகதை — 2 ஆம் இடம் க. தர்மசேகரம் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

★ கட்டுரை — முதலாம் பிரிவு: 3 ஆம் இடம்: க. கீர்த்தனா (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்)

★ கட்டுரை — 4 ஆம் பிரிவு: 3 ஆம் இடம் : கை. சுமங்கலி (வேம்படி)

### கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

பளை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் ஜி. சீ. ஈ. சாதாரண தரம் சித்திபெற்ற மாணவர்களையும் —

இவ்வருடம் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களையும் — கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று பளை கல்வி அபிவிருத்தி அவையினால் நடத்தப்பட்டது.

பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ. கைலாயபிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பளைப் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணியும், கௌரவ விருந்தினராக மேலதிக மாவட்ட பதிவாளர் த. சதாசிவ ஐயரும் கலந்து கொண்டனர். (இ–5-6)

### குடி தண்ணீர் சுத்திகரிப்பு

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகர் பிரிவில் உள்ள மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள இடங்களில் குடி தண்ணீர் சுத்திகரிப்பு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி போன்ற இடங்களில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

நீண்டகாலமாக போர் நடவடிக்கைகளினாலும் மக்களின் பாவனையின்மையாலும் சுத்திகரிக்கப்படாமல் இருந்து வந்துள்ள கிணற்று நீர் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றது. (இ–5-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் மூலம் யாழ். திரும்புவோரை மீளக்குடியமர்த்த விசேட திட்டம்

## ஐ. நா. தூதரகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கி கப்பல் மூலம் திரும்புபவர்களை மீளக்குடியமர்த்த விசேட திட்டம் ஒன்று அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப் படவிருக்கிறது.

மீளக்குடியமரும் மக்களுக்குத் தேவையான இருப்பிடவசதிகள் உட்பட ஏனைய வசதிகளை வழங்க இத்திட்டம் வகுக்கப்படுகிறது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் இது தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள், வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தினார். (இ-3)

# மிதிவெடி தடுப்பு முறை: 600 பேருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம் ஜூலை 7
மிதிவெடிகள் தடுப்புமுறைகள் பற்றி 600-க்கும் மேற்பட்டோருக்கு யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவ துறையினரும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து பயிற்சிகளை வழங்கியுள்ளன.

பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல சேவையாளர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் என பல தரப்பட்டவர்களுக்கு இது தொடர்பாக விழிப்புணர்வு பயிற்சிகளும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் இது தொடர்பான கருத்தரங்குகளையும், பயிற்சிகளையும் வழங்கும் நடவடிக்கையில் இரு பகுதியினரும் ஈடுபட்டு வருகின்றனர். (இ-5-6)

## அலுவலகம் இடமாற்றம்

கொழும்புத்துறை, ஜூலை7
தொல்புரம் கிழக்கு (ஜே-168) கிராம சேவையாளர் காரியாலயம் தற்போது சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் தொல்புரம் கிழக்கு கிளை இல. 15 இயங்கிய கட்டடத்தில் செயற்பட்டு வருவதாக இப்பகுதிக் கிராமசேவையாளர் எஸ். ஸ்ரீமுருகவேள் தெரிவித்துள்ளார். (ஐ-30(

## நூலகம் இடமாற்றம்

வலி. வடக்கு, ஜூலை 7
வலி. வடக்கு மல்லாகம்பிரதேச சபை நூலகம் மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள கூட்டுறவுக் கட்டடத்தில் இயங்குகின்றது.

மேறபடி நூலகம் இது வரை காங்கேசன்துறை வீதியில்உள்ள தனி பார்வீடொன்றில் இயங்கி வந்தது.

இவ்வாரம் முதல் நூலகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (இ-86)

## வேள்வி

ஆனைக்கோட்டை 'காத்தவராயர்' ஆலயத்தில் எதிர் வரும் சனிக்கிழமை கடா ஆடுகள், சேவல்கள் பலியிடும் விழா ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை வலிகாமம் பகுதியில் இடம் பெறும் நான்காவது வேள்வி இது ஆகும். (இ-5-185)

## கால்நடைகள் திருட்டு

நெல்லியடி, ஜூலை 7
புலோலி கிழக்கு சந்தா தோட்டப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஒருமாத கால இடைவெளியில் இரு கால்நடைகள் பட்டப் பகலில் திருடப்பட்டுள்ளன.

சி. பொன்னுத்துரை என்பவரின் வீட்டில கட்டப்பட்டிருந்த மாட்டுக்கன்று ஒன்றும், ஆட்டுக்கடா ஒன்றுமே கடந்த மாதம் திருடர்களினால் அவிழ்த்துச் செல்லப்பட்டுள்ளன. (இ-5-109)

# பயணிகள் கப்பல் மூலம் கடலுணவுப் பொருள்கள் கொழும்புக்கு அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 7
திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடவிருக்கும் பயணிகள் கப்பல் மூலம் கடலுணவுப் பொருள்களை கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தக்கப்பலில் குளிரூட்டிகளை பொருத்தி அவற்றில் வைத்து கடல் உணவுப் பொருள்களை கொழும்புக்கு அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பேச்சுக்கள் நடத்தியபோது, கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு கப்பல் செல்லும் போது இந்தப் பொருள்களை எடுத்துச் சென்று அங்கிருந்து அவற்றை கொழும்புக்கு அனுப்பவே முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# தேசிய இளைஞர் மன்ற அலுவலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 7
தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட அலுவலகம் மற்றும் மாவட்ட தகவல் பணியகம் ஆகியவற்றின் திறப்பு விழா நாளை புதன்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

தேசிய இளைஞர் சேவை மன்ற நிர்வாக இயக்குநர் இ. எம். எஸ். பி. எக்கநாயக்கா இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாவட்ட அலுவலகத்தைத் திறந்து வைப்பார்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலிருந்து மன்ற நிர்வாக இயக்குநர், வடமாகாண பணிப்பாளர் என். பேரானந்தம் ஆகியோர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இவர்களுடன் ஆஸ்திரேலிய ஆய்வாளர் எஸ். அன்டர்சனும் இங்கு வரவுள்ளார்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நாள்களில் தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட செயற்பாடுகளைப் பார்வையிடுவதுடன் இளைஞர்களுடனான சந்திப்புக்களையும் நிகழ்த்தவுள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட தகவல் பணிமனையில் இளைஞர்களுக்குத் தேவையான தொழிற் பயிற்சி, தொழில் வழிகாட்டல், உளவள நலன் போன்றவற்றுக்கான சேவைகள் வழங்கப்படும் என்று இளைஞர்சேவை அதிகரி எஸ். சக்திவேல் தெரிவித்தார்.

தகவல் பணியகத்தின் மூலம், ''இளைஞர் நண்பன்'' என்ற பிரசுரமும் அன்றைய தினம் வெளியிடப்படவுள்ளது. இப்பிரசுரம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தீவுப்பகுதியில் அதிகம் உள்ள மூலிகையாக பாவிக்கப்படும் கண்டங் கத்தரிக்கு அதிக கிராக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 7
ஆயுள் வேத மருத்துவத்துக்கு பயன்படுத்தப்படும் மூலிகையான கண்டங்கத்தரி யாழ். மாவட்டத்திலுள்ள தீவுப்பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றது. இதனை சேகரித்து கொழும்புக்கு அனுப்பினால் கொள்வனவு செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

வடக்கு — கிழக்கு மாகாண ஆயுள்வேத சித்த மருத்துவப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் கடந்த 28 ஆம் திகதி ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது ஆயுள்வேத சிகிச்சைகளுக்காக கண்டங்கத்தரி மூலிகை இந்தியாவில் இருந்து பெருமளவு பணம் கொடுத்து வாங்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இருக்கும் கண்டங் கத்தரி மூலிகைகளை சேகரித்து கொழும்புக்கு அனுப்பினால் நாம் இறக்குமதியை நிறுத்தி அந்தப் பணத்தை இங்கே கண்டங்கத்தரி அனுப்பி வைப்பவர்களுக்கு வழங்க முடியும் என்றும் தெரிவித்தார். (இ-5-6)

## சுகவாழ்வு நிறுவனத்துக்கு அன்பளிப்பு

வலி.தென்மேற்கு ஜூலை7
யாழ். சுகவாழ்வு நிறுவனத்திற்கு யுனிசெவ் நிறுவன யாழ். பிரதிநிதி திருமதி பெணிபுறூனி அவர்களால்ஒரு தொகுதி உபகரணங்களும், சிறுவர்களுக்குரிய விளையாட்டுப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-185)

## சேதமடைந்த வீடுகள் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 7
வலிகாமப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையினால் ''சேதமடைந்த வீடுகள்'' விரைவில் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களினால் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

வலிகாமம் பகுதியில் உள்ள பிரதேச செயலக — கிராம அலுவலர்கள் ''அ'' அட்டை உள்ள வறுமைப்பட்டவர்களின் விவரங்களை பிரதேச செயலகத்துக்கு அனுப்பி போட்டுக் காட்டியுள்ளனர். [இ-5-185]

---

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**நவரத்தினம் புஸ்பராசா**
(வர்த்தகர், மாம்பழம் சந்தி)

தோற்றம் 23 - 10 - 1959 — மறைவு 30 - 06 - 1996
திதி: 07 - 07 - 98

ஆண்டுகள் இரண்டு உருண்டோடினாலும்
அன்பாலும் பண்பாலும் சகலரின் நெஞ்சங்களிலும்
பாச மலராய் பூத்திருக்கிறாய் புஸ்பா!

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதர சகோதரிகள்.

185, கண்டி வீதி,
அரியாலை.
(57376)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 — 09 — 1962



விண்ணில் 07 — 07 — 1997

**அமரர் வெற்றிவேலு இரத்தினராசா**
(வடக்கு—கிழக்கு மாகாணசபைப் பொறியியலாளர்)

மனித குல ராசாவாய்
மங்காப் புகழில் இரத்தினமாய்
பாரினில் முப்பத்தைந்தாண்டுகள் தான் நீ
பதித்தாய் உன் சுவடுகளை.
பாசமிகு மகனாய், சோதரனாய், உத்தம
கணவனாய், தந்தையாய், நண்பனாய்
கணக்கற்ற சேவையினை உள்ளத்து
நேர்மையுடன் இயேசு அவர் தம்
நேரிய பாதையிலே நீ பதித்த சுவடுகள்
பாரினில் ஒரு பாடமாயிற்று.
படித்த பொறியியலுக்கே புகழ்தேடி
பொறியியலாளருக்கும், ஏனையோருக்கும் முன்
மாதிரியாய்
பொறுமை, கடமை, நேர்மை என்னும்
அணிகலனுடன் வாழ்ந்த நீ
காலமென்னும் பொறியில் அகப்பட்டு
காலமெல்லாம் கலங்கிட, கதறிட வைத்திட்டாய்
ஆண்டொன்று போனாலும்
ஆறுமோ எம் உள்ளம்?
அழியா உன் நினைவுகளுடன்
வாழ்ந்திடுவோம் உயிருள்ளவரை.

- குடும்பத்தினர்

திரு. க. வெற்றிவேலு
''இரத்தின வாசம்'',
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(சி/4191)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போர் தேர்தலுக்கா?

கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்றுவரும் ஈழப்போர் மூன்று இன்னும் நான்கு மாதங்களில் முடிவுக்கு வந்து விடுமென்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

போர் தொடங்கியதன் பின்னர் அது முடிவுக்குக் கொண்டுவரப்படுவதற்கான பல கால எல்லைகளைக் கூறிவந்தவர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர். ஆகக் கடைசியாக அவர் வகுத்த கால எல்லை, எதிர்வரும் நவம்பர் மாதமாகும். இம் முறை தமது கணிப்பு பிழைக்காது என்றும், நவம்பர் மாதத்துக்கு முன்னர் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விடுவார்கள் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் அமைச்சரவையில் அடித்துக் கூறியிருக்கிறார்.

மாகாணசபைத் தேர்தல் நடக்கும் பட்சத்தில் போர் நடவடிக்கைகள் நலிவடைந்து போய்விடும் என்ற தமது நிலைப்பாட்டை உறுதி செய்வதற்காகப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் இப்படிக் கூறியிருக்க வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதாக முதலில் முடிவெடுத்த அரசாங்கம், பின்னர் நடத்துவதெனத் தீர்மானித்தது.

எனினும் பிந்திய தகவல்களின்படி, மாகாணசபைத் தேர்தல், போரை முன்னெடுப்பதற்கு — அதனை வெல்வதற்கு — தடங்கலாக இருக்குமாயின் அதனை ஒத்திப் போடுவதே உத்தமம் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இப்போது மனம் மாறியிருக்கிறார்களாம்.

தற்போது வடக்கு — கிழக்கிலும் வேறுசில பகுதிகளிலும் மட்டுமே நடைமுறையிலிருக்கும் அவசரகாலச் சட்டத்தை, நாடு முழுவதற்கும் பிரகடனப்படுத்திவிட்டு மாகாணசபைத் தேர்தலை ஒத்தி வைப்பது என்று அரசுதனக்குள் முடிவுக்கு வந்திருப்பதாக அறியப்படுகிறது.

அதன் பெறுபேறாக மாகாணசபைத் தேர்தல்கள் வரும் டிசம்பர் மாதத்திலேயே நடைபெறும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. போரில் வெற்றியீட்டிய பின்னர் தேர்தலை நடத்துவது அரசுக்கு ஆதரவாக அமையும் எனவும்; அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலை நடத்த வாய்ப்பிருக்கும் என்றும் ஆளுங்கட்சி வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

அரசாங்கத்தின் கணக்கும், நம்பிக்கையும் சரியாகி விட்டால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் சந்தர்ப்பம் அறவே இல்லாமற்போய் விடும். அதாவது சமாதானத்தை அடைவதற்காகவே போர் நடத்தப்படுதாக அரசு கூறிவருகின்றபோதிலும்; தேர்தல்களை வெல்வதற்காகவே, மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே போர் நடத்தப்பட்டதாகிவிடும்.

மொத்தத்தில் தமிழர்களுக்குப் பலவித இன்னல்களைக் கொடுத்தும், அவர்களை அழித்தும் போர் நடத்தியது தேர்தலில் வெல்வதற்கான அரசியல் லாபம் கருதியதே என்பதும் அப்போது வெளிச்சமாகும். அரசின் உள்ளந்தரங்கம் அம்பலமாகும்.

# நிவாரண உணவுப் பொருள்கள் பழுதடைவதில் 'பெரும் மர்மம்!

போர்க் கொடுமைகளால் பாதிக்கப்பட்டு தொழில் இழந்த, சுய தொழில் முயற்சிகளில் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு மக்களுக்கு நிவாரணமாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உலர் உணவு விநியோகத்திற்கென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. உணவுப் பொருள்கள் யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியினரால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்யப்படுவது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்படும் உலர் உணவுப் பொருள்களின் அளவு, விலை, விநியோகம் செய்யும் காலம் முதலியவற்றை அட்டவணைப்படுத்தியே செயலக புனர்வாழ்வுப் பகுதி விநியோகிக்கின்றது. இவ் விநியோகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கணிசமான வருமானமும் கிடைக்கின்றது.

உலர் உணவு விநியோகம் ஆரம்பித்த காலம் முதல் கூட்டுறவுச் சங்கங்கள் மீது பல முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து எழுந்த வண்ணமே உள்ளன.

குறிப்பாக செயலகம் நிவாரண விநியோகத்திற்கென நிர்ணயிக்கும் காலத்தில் விநியோகத்தை செய்யாமை, செயலகத்தினால் பட்டியல்படுத்தப்படாத பொருள்களை விநியோகித்தல், குறித்த அளவைத் திட்டத்தை மாற்றியமைத்தல், குறிக்கப்பட்ட விலையிலும் பொருள்களை கூடிய விலைக்கு விநியோகித்தல், தரம் குறைந்த, பாவனைக்கு உதவாத பொருள்களை விநியோகித்தல் என்பன இத்தகைய முறைப்பாடுகளில் அடங்கும்.

தரம் குறைந்த, பாவனைக்கு உதவாத பொருள்களின் விநியோகம் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வரும் 62 A, B நிவாரணத்தில் யாழ். குடாநாட்டில் உள்ள சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இடம் பெற்றிருக்கிறது.

அதாவது நிவாரண விநியோகத்தில் தரம் குறைந்த, வண்டு அரித்த அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்த செய்தி பத்திரிகையில் வெளியானதும் அதனைச் சங்கங்கள் மறுத்து விடுகின்றன.

### வண்டரித்த அரிசி

யாழ். நகரப் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ். நகரை அண்டியுள்ள அதிகளவு குடும்பங்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் மற்றொரு சங்கம், யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள இரண்டு விவசாயப் புறப் பகுதியில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியனவே இவ்வாறு தரம் குறைந்த (வண்டரித்த) அரிசியை விநியோகம் செய்ததாக முறைப்பாடுகள் செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் உண்மைத் தன்மையை அறிவதற்காக சம்பந்தப்பட்ட சங்கம் ஒன்றின் கிளைக்குச் சென்ற போது, அங்கே நிவாரணம் பெறவந்த ஒருவர் கிளை முகாமையாளரை நோக்கி கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்.

கேள்வி:- அண்ணை, இந்த அரிசி முழுக்க வண்டரிச்சதாக்கிடக்கே.

பதில்:- ''அலங்க தந்த மூடை எல்லாம் வண்டரிச்சதுதான். விருப்பமெண்டால்

## இரு சாராரும் தமது தவறில்லையெனின் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதா?

வாங்குங்கோ''

இதனைக் கேட்ட நிவாரணம் பெறவந்தவர் ''ஏதோ தாறதைத் தாங்கோ'' எனக் கூறி வாங்கிச் சென்றார்.

இதன் பின்னர் இன்னொரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஒருவரிடம் மேற்குறிப்பிட்ட தரம் குறைந்த பாவனைக்குதவாத அரிசி விநியோகம் குறித்து கேட்கச் சென்ற போது அவர் கூறினார்:-

தரம் குறைந்த அரிசி விநியோகம் குறித்து எனக்கு இது வரை எதுவித முறைப்

### செய்திமடல்

பாடும் வரவில்லை; அப்படி தரம் குறைந்த அரிசி விநியோகம் இடம் பெற்றிருந்தால் அதனை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியே பொறுப்பேற்க வேண்டும். காரணம் அவர்கள் தந்த அரிசியையே நாம் விநியோகிக்கின்றோம் — என்பதாகும்.

எனவே இதற்குப் பின்னர் தரம் குறைந்த, வண்டரித்த அரிசி எங்கிருந்து வருகின்றது என்பதை அறிவதற்காக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்குச் சென்று உலர் உணவு விநியோகத்துடன் தொடர்பான அதிகாரியைச் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

அவர் தரம் குறைந்த அரிசி விநியோகம் குறித்து ஆச்சரியப்பட்டதுடன் தம்மால் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நல்ல நிலையிலுள்ள பொருள்களே (அரிசி உட்பட) விநியோகம் செய்யப்படுவதாகவும் அதனை எடுத்துக் காட்டும் விநியோகம் குறித்தபொருள்கள் அடங்கிய சிறு பைக்கற்றுக்களையும் எடுத்துக் காட்டினார்.

தங்களால் சங்கங்களுக்கு நல்லநிலையிலுள்ள பொருள்களே நிவாரண விநியோகத்திற்கென வழங்கப்படுவதாக மிக உறுதிபடக் கூறினார்.

### களஞ்சியத்தில்

உலர் உணவு விநியோகத்திற்கென பொருள்கள் களஞ்சியப் படுத்தி வைக்கப்படும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள உலர் உணவுப் பொருள்கள் யாவும் நல்ல நிலையில் இருப்பதைக் காணமுடிந்தது.

நல்ல தரமான பொருள்களையே தாம் சங்கங்களுக்கு விநியோகம் செய்வதாகவும், சில வேளைகளில் சங்கங்களால் தரம் குறைந்ததென திருப்பி ஒப்படைக்கப்படும் பொருள்களைப் பெற்று நல்ல பொருள்களை மாற்றிக் கொடுத்து வந்துள்ளதாகவும் களஞ்சியப் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினரால் நல்ல நிலையில் உள்ளதெனக் கருதப்பட்டு சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படும் பொருள்கள் மக்களைச் சென்றடையும் போது மட்டும் தரம் குறைந்ததாகவும், வண்டு அரித்ததாகவும் மாறுவது எப்படி என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

### ஆனந்தன்

### குற்றச்சாட்டு

சங்கங்களின் கிளை முகாமையாளர்கள் சிலர் தமது சங்கத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட உலர் உணவுப் பொருள்களை தனியார் கடைகளுக்கு விற்பனை செய்வதாக குற்றம் சாட்டப்படுகிறது.

உலர் உணவு விநியோகம் குறித்து வெளியிட்ட மற்றுமோர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் கருத்துத் தெரிவிக்கையில் தரம் குறைந்த அரிசி விநியோகம் குறித்து மக்கள் தமக்கு எந்த வகையான முறைப்பாடும் செய்யவில்லை என்றும்-

கிளை முகாமையாளர்கள் பலரையும் அழைத்து கூட்டங்கள் நடத்தும் போது இவ்விடயம் குறித்து அவர்கள் எந்த வகையான முறைப்பாடும் செய்யவில்லை என்றும்-

பெரும்பாலும் அரிசி மூடைகளில் ''குறுணி'' அரிசி அதிகரித்துள்ளதாகவும் இதனாலேயே வாடிக்கையாளருக்கு நல்ல தரமான அரிசியை தம்மால் விநியோகம் செய்ய முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

உலர் உணவு விநியோகத்திற்கான அனுமதியை அந்த அந்த பிரதேச செயலகங்கள் தந்ததும் உணவுக்களஞ்சியத்திலிருந்து பொருள்களை எடுத்துவந்து கிளைகள்மூலம் நாம் மக்களுக்கு விநியோகிக்கின்றோம்—

செயலகப் புனர்வாழ்வுப் பகுதி குறிப்பிடுவது போல் நிவாரண விநியோகத்திற்கான அனுமதி, பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படுவது போன்று பிரதேச செயலகங்களினால் உரிய காலத்தில் எமக்கு வழங்கப்படுவதில்லை.

இதனால் பத்திரிகைச் செய்தியைப் பார்த்த மக்கள் சங்கங்கள் தமக்கான நிவாரணத்தைத் தர பின்னிற்கின்றன என்ற தவறான எண்ணத்தைக் கொள்கின்றனர்.

எந்த ஒரு விடயத்தையும் நூற்றுக்கு நூறு வீதம் சரியாகச் செய்துவிட முடியாது. எங்கோ ஒரு சிறு பிழை ஏற்படுவது தவிர்க்க முடியாதது- என்றும் சம்பந்தப்பட்ட பொது முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மொத்தத்தில்- செயலகப் புனர்வாழ்வுப் பகுதி நல்ல தரமான உலர் உணவுப் பொருள்களையே தாம்வழங்குவதாகக் கூறுகின்றன. உணவுக் களஞ்சியத் தகவல்களும் அதனை உறுதிப்படுத்துகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களும் தாம் புனர்வாழ்வுப் பகுதி தரும் பொருள்களையே விநியோகிப்பதாகக் குறிப்பிடுகின்றன. ஆனால் மக்களோ வண்டரித்த தரம் குறைந்த அரசியே தமக்கு வழங்கப்படுவதாக குறைப்படுகின்றனர்.

பழுதடைந்த அரசி எங்கிருந்து வருகிறது என்பதே பெரும் மர்மமாக உள்ளது! ★

## சித்த வைத்தியசாலைகள் இயங்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை7

பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் இயங்கிய 6 சித்த வைத்தியசாலைக் கிளைகள் மூடப்பட்டுள்ளன.

இதே போன்று யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பல சித்த வைத்திய சாலைக் கிளைகள் மூடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்திய சாலைக் கிளைகளில் கடமையாற்றியவர்களுக்கு வேதனம் வழங்கப்படாமை உட்பட பல காரணங்களினால் வைத்திய சாலைக் கிளைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் சித்த வைத்தியசாலைகள் சிறப்பான முறையில் இயங்கி வந்தன. இதில் கடமையாற்றியவர்களுக்குரிய வேதனம் வைத்திய சாலைகளுக்குத் தேவையான மருந்துகள் முதலியன சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளூராட்சித்திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் இந்த வைத்தியசாலைகள் கொண்டுவரப்பட்டதையடுத்து இதன் செயற்பாடுகளில் ஸ்தம்பிதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (8-5)

## விளையாட்டுப் போட்டி

சுழிபுரம் காட்டுப்புலம் தமிழ்க் கலைவன் பாடசாலை மெய்வல்லுனர் போட்டி பாடசாலை அதிபர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் மு. தம்பிஐயா கலந்துகொண்டார்.

பாடசாலை தற்காலிகமாக தனியார் இல்லத்தில் நடைபெற்று வருகின்றது.

வசதியீனங்கள் குறைந்த நிலையில் இருந்தும் போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டன. (இ-28)

### நாளை

ஆனி - 24

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி

முன்னிரவு 10.25 வரை.

நட்சத்திரம்: மூலம்

பின்னிரவு 04.11 வரை.

சுபநேரம் 10.28 - 11.58

ராகுகாலம்: 11.58 - 01.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எனது அகராதியில் 'முடியாது' என்ற சொல்லுக்கு இடமில்லை

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 ஹெக்டேயரில் இம்முறை உருளைக்கிழங்கு செய்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். மாவட்டத்தில் இம்முறை 75 ஹெக்டேயரில் உருளைக்கிழங்கு செய்கை மேற் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென 150 மெ. தொ. விதை உருளைக் கிழங்கு கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவுள்ளது.

டிசறி என்ற மூன்று மாத இனமும். லைரா என்ற 75 நாள் இனமும் யாழ்ப்பாணத்தில் செய்கை பண்ண உகந்தது என சிபார்சு செய்யப்பட்டுள்ளதால் இந்த இரண்டு உருளைக்கிழங்கு இனங்களே யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளதாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் செய்கை பண்ணப்பட்டு பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்த உருளைக் கிழங்கு அறுவடை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்ற வருடம் விதை உருளைக்கிழங்கு காலந் தாழ்த்தியே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதால் இம்முறை விரைவாக விதை உருளைக் கிழங்கை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை கமநல சேவை திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (இ–5–6)

## பிரதேச செயலகங்களில்

## 15 ஆம் திகதியிலிருந்து 28 பேர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை7

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் இருந்து இடமாற்றம் கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த எழுதுவினைஞர் மற்றும் தட்டெழுத்தாளர் அரசபணியாளர்களுக்கு இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இடமாற்றம் தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கும் இடமாற்றம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கும் யாழ். அரச அதிபரினால் ஒப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

28 உத்தியோகத்தர்கள் இவ்வாறு இடமாற்றம் பெற்றுள்ளனர். [இ – 7]

## உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரசபை நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளினது அபிவிருத்தி வேலைகளுக்கென வட பகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை 90 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

உள்ளூராட்சிசபை அபிவிருத்தி வேலைகளுக்கு என வடபகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை 4 கோடியே 22 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்திருந்தது. இந்த நிதியில் இருந்தே ஆரம்ப கட்டமாக 90 லட்சம் ரூபா நிதியே உள்ளூராட்சி சபை ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை, வேலணைப் பிரதேச சபை ஆகிய இரண்டு சபைகளையும் தவிர்ந்த 15 உள்ளூராட்சி சபைகளுக்கும் இந்தப் பணத்தில் இருந்து ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரதேச சபைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரம் வருமாறு.

★ பருத்தித்துறை பிரதேசசபை:–ரூபா 5லட்சத்து 55 ஆயிரம்.

★ வடமராட்சி தெற்கு, மேற்கு :– ரூபா 6 லட்சம்

★ பருத்தித்துறை நகர சபை:- ரூபா 6 லட்சத்து 20 ஆயிரம்

★ சாவகச்சேரி நகர சபை:– ரூபா 6 லட்சத்து 30 ஆயிரம்

★ வல்வெட்டித்துறை நகரசபை;- ரூபா 5 லட்சத்து 66 ஆயிரம்.

★ சாவகச்சேரி பிரதேச சபை:- ரூபா 6 லட்சம்

★ நல்லூர் :- ரூபா 5 லட்சத்து 75 ஆயிரம்

★ வலி. கிழக்கு;– ரூபா 6 லட்சம்

★ வலி. தென்மேற்கு ரூபா 5 லட்சத்து 50 ஆயிரம்

★ வலி. வடக்கு:– ரூபா 6 லட்சத்து 35 ஆயிரம்

★ பச்சிலைப்பள்ளி:– ரூபா 5 லட்சத்து 99 ஆயிரம்

★ வலி. மேற்கு:– ரூபா 6 லட்சம்

★ ஊர்காவற்றுறை:–ரூபா 6 லட்சத்து 70 ஆயிரம்

★ நெடுந்தீவு:– ரூபா 6 லட்சம்

★ வலி. தெற்கு:– ரூபா 6 லட்சம்

அதே சமயம் இந்த உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதும் இவற்றில் ஒன்றிரண்டைத் தவிர ஏனைய உள்ளூராட்சி சபைகள் இயங்கவில்லை என்றும்.

இதனால் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமான கேள்விகளைக்கோரி வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க முடியாத நிலை இருந்து வருகிறது என்றும்-

இதன் காரணமாக வழங்கப்பட்ட நிதியைப் பயனபடுத்தாமல் முடக்கிவைக்க வேண்டியுள்ளது என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (இ-5-6)

## நிவாரண வெட்டுபாதிப்பை தவிர்ப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை7

உலர் உணவு நிவாரணம் பெறும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் அரசின் முடிவால் யாழ். மாவட்டத்தில் நிவாரணம் பெறுபவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் இத்திட்டத்தை வடமாகாண மீளக் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவரிடம் சமர்ப்பித்து கலந்துரையாடியுள்ளார்.

கொள்கை அளவில் இத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள அவர் இது தொடர்பான அறிவிப்பை விரைவில் வெளியிடுவார்.

தற்போது நிவாரணம் பெறும் தனிநபர் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையை வேறு குடும்பங்களின் பட்டியலுடன் இணைத்தல் இத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். (இ–5)

## தாக சாந்தி நிலையம்

கொழும்புத்துறை ஜூலை 7

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவை முன்னிட்டு நாளை புதன்கிழமை காலை கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தினர் தாக சாந்தி நிலையம் அமைத்து அடியார்களுக்கு தாக சாந்தி செய்யவுள்ளனர். (இ–5-30)

## தையல் தட்டச்சு பயிற்சி

நெல்லியடி ஜூலை 7

வதிரி - தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆங்கிலத் தட்டச்சுப் பயிற்சியும். தையற் பயிற்சியும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

இந்த இரு பயிற்சிகளிலும் சேரவிரும்புவோர் கல்லூரி அதிபருடன் இம்மாதம் 15–ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் எம், குட்டித்தம்பி தெரிவித்துள்ளார். (இ-5-109)

## கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 7

கடந்த 2 ஆம் திகதி காங்கேசன்துறை வந்து சேர்ந்த லங்கா முடித கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அரிசி, சீனி முதலிய உணவுப் பொருள்களும், அரசாங்க மற்றும் தனியாருக்கான பொருள்களும் இக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

மின் விநியோகத்திற்கான ஏழு ஜெனரேட்டர்கள் லொறிகள் மற்றும் டிராக்டர், வீதி திருத்துவதற்கான றோலர்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குரிய எரிபொருள் என்பனவும் சீநோர் நிறுவனத்திற்குரிய ஒரு தொகுதி வலைகளும் லங்கா முடித மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன. (இ-7)

## மண்வெட்டி விநியோகம்

வலிகாமம் தெற்கு ஜூலை 7

விவசாய சம்மேளனங்களின் சிபார்சுக்கு அமைய முன்னர் மண்வெட்டிகளைப் பெறாத விவசாயிகளுக்கும் தேவையான மண் வெட்டிகள் உடுவில் கமநல கேந்திர நிலையத்தினூடாக வழங்கப்பட உள்ளன.

கமநல சேவை கேந்திர நிலையங்களூடாக விவசாயிகளுக்கு தேவையான மண் வெட்டிகளை யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்களத்தினர் [illegible] விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர். (இ-5-152)


## வாழ்த்தி வரவேற்கின்றோம்

எமது பாடசாலையில் புதிய அதிபராகக் கடமையேற்கும்

திரு. ந. நவரத்தினராஜா (B. A. Dip. in -Ed)

அவர்களை மனநிறைவோடு வாழ்த்தி வரவேற்கின்றோம்.

பழைய மாணவர்கள்

(57402) யா/வரணி மகாவித்தியாலயம்



## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

**A/L 2000**

புதிய பிரிவு

இணைந்த கணிதம் — திரு. A. பத்மநாதன்

பௌதிகவியல் — திரு. சம்பந்தன்

ஆரம்பம்: 09 – 07 1998 (வியாழன்)

(55448)


## கண்ணீர் அஞ்சலி

ஈவினை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், ஆசிரிய ஆலோசகருமான

க. செல்லப்பிரகாசம்

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி கனகரத்தினம் செல்லாச்சி

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கற்பக விநாயகர் சனசமூக நிலையம்

ஈவினை மத்தி

கிராம முன்னேற்றச் சங்கம்

(57407) ஈவினை

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ந. மகேந்திரராஜா

(மக்கள் வங்கி, மன்னார்)

03-07-1998 இல் காலமாகிய எமது சக ஊழியர்

அமரர் ந. மகேந்திரராஜா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக்காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
மக்கள்வங்கி,
யாழ். பிராந்தியத்தலைமையகம்.
(57404) யாழ்ப்பாணம்.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 13 — 04 — 1944

உதிர்வு 10 — 07 — 1995

### அமரர்
### க. நாராயணசிங்கம்

(உரிமையாளர்: ஸ்ருடியோ நித்ய சித்ரா, சங்கானை)

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

– குடும்பத்தினர்

''நித்ய சித்ரா'',
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(57403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மிருசுவில் சம்பவம்:

# படையினருக்கு சம்பந்தம் இல்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

''மிருசுவில் வடக்கைச் சேர்ந்த செல்வி கந்தசாமி கலாநிதியின் மரணத்துக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை''

இப்படி பலாலி இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். குடாநாட்டிலுள்ள பாதுகாப்புப் படையினருக்கு மாசுகற்பிக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பொய்யான பிரசார இயக்கம் ஒன்றை நடத்தி வருகிறார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

மிருசுவில் வடக்கில் தமது பெற்றோருடன் வாழ்ந்து வந்த இருபத்தேழு வயதான செல்வி கந்தசாமி கலாநிதியின் மரணத்திற்கு பாதுகாப்புப் படையினரே பொறுப்பு என்று தெரிவிக்கும் பத்திரிகை அறிக்கை ஒன்றை வேண்டுமென்றே, உள்நோக்கத்துடன் விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பிரசார இயக்கத்தின் பிரகாரம் மேற்படி சம்பவத்தில் குறிப்பிட்ட பெண் பாதுகாப்புப் படையினரால் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொய்யான குற்றச்சாட்டு குறித்து தெரிய வந்த உடனேயே இது விடயமாக இயன்றளவு ஒவ்வொரு நடைமுறையையும் கைக்கொண்டு விசாரணையை நடத்துவதற்கு படையினர் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அந்தப் பகுதியைச்சேர்ந்த கௌரவமான பிரஜைகளின் உதவியுடன் பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் மிகவும் ஆழமான முறையில் புலனாய்வுகளை நடத்தினர்.

அந்த விசாரணைகளில் இருந்து செல்வி கந்தசாமி கலாநிதியின் மரணத்திற்கும் பாதுகாப்புப் படையினருக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்று தெரியவந்துள்ளது.

மேலும் அந்தப் பெண்மன நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் அதன் காரணமாக தமது வீட்டில் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.—இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடந்த விசாரணை அறிக்கையும் செய்திக் குறிப்புடன் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது. (இ-ரீ-3)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 7

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் டொனால்ட் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

'சிற்றி மெடிக்கல்ஸ்' நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெறும் முதலாவது போட்டியில் மானிப்பாய் பரிஷ் வி. க. அணியை எதிர்த்து யங் ஸ்ரார்ஸ் அணி மோதும்.

இந்த ஆட்டம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். (ஐ)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

### வர்த்தகர்களுக்கான

# அன்பான வேண்டுகோள்

07-07-98, 09-07-98 இரு வர்த்தக விடுமுறைத் தினங்களும் தொடர்ச்சியாக வருவதனால், 07-07-98 செவ்வாய்க்கிழமை வர்த்தக நிலையங்களைத் திறக்கலாமெனவும், இந்த வர்த்தக விடுமுறைத் தினத்திற்குப் பதிலாக 23-07-98 வியாழக்கிழமை ஆடி அமாவாசை தினத்திற்குச் சகல வர்த்தக நிலையங்களையும் மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

09-07-98 வியாழக்கிழமை வர்த்தக விடுமுறைத் தினத்தில் சகல வர்த்தக ஸ்தாபனங்களும் மூடப்பட வேண்டுமெனவும், அதன் பின் ஒவ்வொரு மாதமும் கலண்டரில் குறிப்பிட்ட அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட சகல அரச வர்த்தக விடுமுறைத் தினங்களிலும், வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டுமெனவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வறிவித்தலின் பின் விசேட வர்த்தக விடுமுறை பற்றிய அறிவித்தல் மட்டுமே பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

-யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல: 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (சி/4207)



## 100 ஆவது நாள் நினைவஞ்சலி

(07 - 07 1998)

கல்விப் பணிப்பாளர்

# அமரர் சு. இரத்தினராசா

அவர்கள் நெஞ்சத்து நீங்காத நினைவாக நிலைத்துவிட்டார். அவரது நினைவாக

'' கலங்கரை விளக்கு
கல்விப்பணிப்பாளர் இரத்தினராசா ''

எனும் நூல் 14-07-98 செவ்வாய்க்கிழமை பி.ப. 1-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் துணை வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தலைமையில் வெளியிடப்படும்.

பிரதம விருந்தினர்:- திரு. க. சண்முகநாதன்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கம்

(57411)


# வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு மருந்துகளை அனுப்புக!

## ஈ.பி.டி.பி கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 7

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிபகுதியில் பரவும் வாந்திபேதி நோயைத் தடுக்க தேவையான மருந்து வகைகளை அனுப்பிவைக்க வேண்டும்.

ஈ. பி. டி. பி அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் சுகாதார அமைச்சரிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

சுகாதார அமைச்சருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இப்படிக் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னியில் வாந்திபேதி பரவுவதால் மக்கள் பெரும் கஷ்ட நிலையை அனுபவிக்கின்றனர், அவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை அனுப்ப வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்வதன் மூலம் உயிராபத்தில் இருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும்.

போதிய உணவுப்பொருள்கள் கிடைக்காது இன்னற்படும் அந்த மக்கள் நோயாலும் பாதிக்கப்படாமல் இருக்க மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு மருந்து வகைகளை அனுப்ப வேண்டும்.

இப்படி அக்கடிதத்தில் அவர் கேட்டுள்ளார். (இ-3)

# மூன்று வீடுகள், கள்ளுத் தவறணை நெடுந்தீவில் மர்மமாகத் தீக்கிரை!

நெடுந்தீவு, ஜூலை 7

நெடுந்தீவுப் பகுதியில் கடந்த வாரம் மூன்று வீடுகளும், கள்ளுத்தவறணை ஒன்றும் இரவுவேளை மர்மமான முறையில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு நெடுந்தீவு 15 ஆம் வட்டாரத்தில் உள்ள மூன்று வீடுகள் தீக்கிரையாகின. அவற்றில் இரண்டு வீடுகளில் ஆள்களோ, உடைமைகளோ இருக்கவில்லை. ஆனால் மூன்றாவது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு தாயும் இரு பிள்ளைகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். வீட்டில் பரவிய தீயினால் எழுந்த வெப்பம் காரணமாகத் திடுக்குற்று எழுந்த அவர்கள் வீட்டுக்கு வெளியே ஓடித் தப்பினர். வீட்டில் இருந்த பெறுமதியான உடைமைகள் எரிந்து சாம்பராயின.

அதே வட்டாரத்தில் சனிக்கிழமை இரவு கள்ளுத் தவறணை ஒன்று தீ மூட்டி எரிக்கப்பட்டது. (ஐ-111)

## சமய சந்நிதிகளில்

ஏழாலை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள்ஆலயத்தின் பஞ்சமதின இலட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறும்.

இன்று நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வரபூசையும் இடம்பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும், விசேட பூசை ஆராதனையும் இடம்பெறும்.

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் அருள்மிகு கண்ணகை அம்மன் (சோலை அம்மன்) கோயிலின் வருடாந்தஉற்சவ தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலையும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ-30)

★ ★ ★

கோப்பாய் அருள்மிகு ஸ்ரீ வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது. மறுநாள் காலை துவஜா அவரோகண நவசந்தி விமர்சனம் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ செல்வக்கதிர்காம சுவாமி ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமை காலையும், மறுநாள் பூரணை தினம் காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

## லொத்தர் சபை அலுவலகத்தில் கொள்ளை!

தேசியலொத்தர் சபையின் களுத்துறை தெற்கு பிராந்திய அலுவலகத்தில் இருந்து 4 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம்நேற்று நண்பகல்ஆயுத பாணிகளால் கொள்ளையிடப்பட்டது.

ரிவோல்வர், கிரனேட் சகிதம் நுழைந்த கொள்ளையர்கள் பணியாளர்களை மிரட்டி பணத்தை அபகரித்து [illegible] மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர். (ஐ-21)

# குமுதினிப் படகின் முதல் சேவை இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 7

தீவுப் பகுதிகளுக்கு இடையிலான 'குமுதினி' படகு சேவை மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகிறது.

நீண்ட காலமாகப் பழுதடைந்து திருத்தப்படாமல் இருந்த இப்படகு அண்மையில் 50 லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. இப்படகு நேற்று ஊர்காவற்றுறையில் இருந்து நயினாதீவுக்குப் பரீட்சார்த்த சேவையில் ஈடுபட்டதாக ஈ. பி. டி. பி. அமைப்பின் தீவக அரசியல் அமைப்பாளர் மதனராஜா தெரிவித்தார்.

இன்று முதல் ஊர்காவற்றுறையில் இருந்து நெடுந்தீவுக்கான முதலாவது சேவை ஆரம்பமாகவுள்ளது. (ஐ-9)

### ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சை

# தோற்றுவோர் தொகை கணிப்பிட முடியாத நிலை

கொழும்பு, ஜூலை 7

ஜீ. சி. ஈ. உயர் தரப் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. ஆனால் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைச் சரிவரக் கணிப்பிட முடியாத நிலை பரீட்சைத் திணைக்களத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

தபால் ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாகத் தபால் விநியோகம் பாதிக்கப்பட்டதால் பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் உரிய வேளையில் பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைக்கவில்லை இதன் காரணமாகவே மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை வெளியிட முடியாதிருப்பதாக பரீட்சைத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-10)

### செம்மணியில் புதைகுழியா?

# தோண்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

## பாதுகாவலர் சங்கம் மகஜர்

செம்மணிப் பகுதியில் மேலும் பல மனித புதைகுழிகள் இருப்பதாக தெரிவிக்கப்படுவதால் அவற்றைத் தோண்ட நடவடிக்கை எடுக்குமாறு கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் சேனகா தசநாயக்காவிடம் இது குறித்த மகஜர் ஒன்றையும் மேற்படி பாதுகாவலர் சங்கத்தினர் நேற்றுக் கையளித்தனர்.

கைதானோர் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத் தூதுக்குழுவினர் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்குச் சென்று இது தொடர்பாக பிரதேச இணைப்பாளரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சங்கத்தின் சார்பில் ஒப்படைக்கப்பட்ட மகஜரை ஏற்றுக் கொண்ட பிரதேச இணைப்பாளர் மேல் நடவடிக்கைக்காக அதனைக் கொழும்புக்கு அனுப்பிவைத்துள்ளார். (ஐ5-6-7)

## கதிர்காமர் பாகிஸ்தானில்

இஸ்லாமாபாத், ஜூலை 7

பாகிஸ்தானுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் போய்ச் சேர்ந்தார்.

கொழும்பில் நடைபெறவுள்ள 'சார்க்' உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கோரும் அழைப்பை பிரதமர் நவாஸ் ஷெரீப்பிடம் உத்தியோகபூர்வமாக வழங்குவதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார். (ஐ-ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமர்ந்து போராட்டம் நடத்திய நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களே அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப் பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த அதிரடிப் படையினர் சிலர் மாணவர்களை அங்கிருந்து விரட்ட முற்பட்ட போது ஏற்பட்ட அமளியில் மூன்று மாணவிகள் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

படையினர் தடிகள் மற்றும் பெல்ட்டுகளினால் மாணவர்களைத் தாக்கி விரட்டியதாகக் கூறப் படுகிறது.

மாணவரின் போராட்டத்தை படையினர் தடுத்ததை அடுத்து ஆத்திரமடைந்த மாணவர் கும்பல் ஒன்று சில பாடசாலைகள் மீது கற்களை வீசித் தாக்கியதாகவும் தெரிவிக்கப் படுகிறது. உவர்மலை வித்தியாலயம், புனித பிரான்சிஸ் சவேரியர் கல்லூரி, மற்றும் திருமலை கல்வித் திணைக்களம் ஆகியன கல்வீச்சுக்கு இலக்காகின. திருமலை நகரில் உள்ள பொதுச்சேவை ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 'பஜிரோ' வாகனம் ஒன்றும் மாணவர்களால் சேதமாக்கப்பட்டது.

(உ-ஐ)

## ஆபத்தான...

(முதலாம் பக்கத் தொடர்)

பக்க நுரையீரலில் ஏற்பட்ட துப்பாக்கிச் சன்னக் காயத்தினால் அப்பகுதி சுருங்கிக் காணப்பட்டது. அதற்காக அவரது நுரையீரலில் Inter Castal Tube பொருத்தப்பட்டிருந்தது. நுரையீரல் சரியானதை அடுத்து அது தற்போது நீக்கப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா சரளமாக உரையாட முற்படுகின்ற போதிலும், அவரின் உடல்நிலை தேறவேண்டிய காரணத்தால் அவருடன் உரையாடுவதை உதவியாளர்கள் தவிர்த்து வருகின்றனர்.

நேற்றுத் தம்மைப் பார்க்க வந்த தமிழ் அரசியல்வாதி ஒருவரிடம் ''எதிர்பாராத சமயத்தில் பின்னால் இருந்து பலர் ஒன்றுசேர்ந்து தாக்கி விட்டார்கள்'' என்று அவர் கூறியதாக அந்த அரசியல்வாதி சொன்னார்.

''இந்தவிடயங்கள் குறித்து இப்போது யோசிக்க வேண்டாம், எல்லாம் பிறகு பேசலாம். இப்போது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்'' —என்று தாம் பதிலளித்து விட்டு வந்ததாக அந்த தமிழ் அரசியல்வாதி குறிப்பிட்டார்.

தற்போது டக்ளஸின் உடல் நிலைதேறி வருவதால் தொடர்ந்து அவரை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனவும்—

எனினும் அவர் முக்கிய அரசியல் பிரமுகர் என்பதால் தொடர்ந்து அப்பிரிவில் வைத்தே சிகிச்சையளிக்கப்படுவார் என்றும் —

வைத்திய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## வேலையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

லாளர் விநாயகலிங்கம், திருமலை நகரசபைத் தலைவர் பொ. சூரியமூர்த்தி மற்றும் கட்சிகளின் பிரமுகர்கள், திணைக்கள அதிகாரிகள் உண்ணாவிரதிகளை நேற்று மாலை நேரில் சென்று பார்த்தனர். பிரதம செயலாளர் ஜீ. கிருஷ்ணமூர்த்தி அங்கு உரையாற்றினார். பின்னர் குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

வேலையற்ற பட்டதாரிகள் கடந்த வியாழனன்று ஆரம்பித்த இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று திருமலை நகர பாடசாலைகளின் மாணவர்களும், தனியார் கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்லூரி ஆகியனவற்றைச் சேர்ந்த மாணவர்களும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாகாணசபை பிரதம செயலாளரின் அலுவலகத்துக்கு முன்பாக தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட — வேலையற்ற — மூன்று பட்டதாரிகளில் ஒருவர் ஏற்கனவே மயக்கமுற்ற நிலையில் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஏனைய இருவரும் நேற்று திருமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்களும் மயக்க நிலையில் — உடற் பாதிப்புடன் — இருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது.

(உ-ஐ-1-9)

### தலதாமாளிகை குண்டுத் தாக்குதல்

# அரசவிசாரணைக் குழுவின் அறிக்கை

# பௌத்த பீடாதிபதிகள் நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 7

தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய அரசு நியமித்த மூவர் கொண்ட குழு அண்மையில் சமர்ப்பித்த இறுதி அறிக்கையை பௌத்த பீடாதிபதிகள் நிராகரித்துள்ளனர்.

தங்கள் அனுமதி இன்றி மேற்படி அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாக அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் தம்மைச் சந்தித்த நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸிடம் தெரிவித்துள்ளனர்.

தலதா மாளிகையின் பாதுகாப்புக்கு பொலீஸ் பாதுகாப்பு போதுமானதாக இருக்கவில்லை என்று விசாரணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பொலீஸார் மீது குறை கூற முடியாது. தலதா மாளிகைக்கு இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று பீடாதிபதிகள் தெரிவித்தனர்.

டி. பி. விஜயதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஒரு சமயம் தலதா மாளிகையின் இராணுவப் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட இருந்த போது பீடாதிபதிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக அது கைவிடப்பட்டது.

பீடாதிபதிகள் இச்சம்பவத்தை அமைச்சர்கள் பீரிஸிடம் சுட்டிக்காட்டினர்.

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்)

திரும்பிய இந்தப் பெண் போதைவஸ்து பாவனைக்கு உட்பட்டிருந்தார் என்றும்—

நேற்று கோயில் வீதியில் அவர் தவறான நிலையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு வந்த மகன், தாயின் போக்கைப் பொறுக்க முடியாது மண்வெட்டிப் பிடியால் தாயின் தலையில் தாக்கியதாகவும்—

இதனால் அப்பெண் உயிரிழந்ததாகவும் — கூறப்படுகின்றது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய அக்கரைப்பற்று மரணவிசாரணை அதிகாரி போதைவஸ்து பாவனையில் ஈடுபடுவோருக்கு இச்சம்பவம் நல்ல படிப்பினை என்று தெரிவித்தார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக மகனான இரா. உதயகுமார் (வயது 17) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (உ-1)

## திருகோணமலையில்...

(முதலாம் பக்கம் தொடர்)

வீதியாகச் சென்று பொலீஸார் கோரிக்கை விடுத்தனர். அதனையடுத்து சில கடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன.

நீண்ட காலத்தின் பின்னர் திருகோணமலையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தககது. பல தரப்புகளில் இருந்தும் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கப்படடிருந்தது.

(உ-ஐ-1-9)

### ஜனாதிபதி மாளிகையில்

## திருடப்பட்ட ஓவியம் லண்டனில் விற்பனை

கொழும்பு, ஜூலை 7

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி மாளிகையில் இருந்து காணாமற்போன விலை மதிப்பற்ற — வரலாற்றுச் சிறப்பு மிக்க — ஓவியம் ஒன்று லண்டன் ஏல விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஓவியம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து திருடப்பட்டு நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு லண்டனில் விற்பனையாகியது எவ்வாறு என்பது குறித்து ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இரகசியப் பொலீஸார் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஓவியத்தைத் திருடிய நபரிடம் இருந்து அதை வாங்கிய மற்றொருவரே அதனை கூடிய விலைக்கு விற்பதற்காக லண்டனுக்குக் கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-9-10]

## பொலீஸ் களஞ்சியத்தில் முக்கிய பைல்கள் மறைவு!

கொழும்பு பொலீஸ் தலைமையகத்திலுள்ள எழுது கருவிகள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த அதி முக்கியமான சில கோவைகளும், சீருடைகளும் அங்கிருந்து களவாடப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இரகசியங்கள் அடங்கிய முக்கியமான கோவைகள் இக் களஞ்சியத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. அண்மையில் பொலீஸ் தலைமைப் பணிப்பாளர் (பொருள்கள்) லவித்லேஹமகே இக் களஞ்சியத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார். அது சமயமே இந்தக் கோவைகளும், சீருடைகளும் களவாடப்பட்டிருப்பது தெரியவந்தது. அதனையடுத்து பொலீஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் களஞ்சியப் பொறுப்பாளர், இன்ஸ்பெக்டர், எழுதுநர் ஆகியோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10-9)

## கவிதை...

(முதலாம் பக்கத் தொடர்)

றுள்ளனர்.

தனித்திறமை உடைய மாணவர்களுக்கும், அங்கவீனமுற்ற மாணவர்களுக்கும் விசேட பாடங்களில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் மேலதிக புள்ளிகள் வழங்கப்பட்டு விசேட அனுமதி வழங்கும் புதிய அனுமதித்திட்டத்தின் கீழேயே இவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

(ஐ-9)

## தங்கபாலு நீக்கம்

சென்னை, ஜூலை 7

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக திண்டிவனம் இராமமூர்த்தி நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுவரை கட்சியின் தலைவராகஇருந்த முன்னாள் அமைச்சர் கே. வி. தங்கபாலு அப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

(ஐ-9)


ஜூலை 1998

# இன்னிசை நற்செய்திப் பெருவிழா

மீண்டும் உங்களுடன்

தந்தை பெர்க்மான்ஸ்

இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்

## "ஆறுதலின் தொனி"

ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்

| இடம் | காலம் | நேரம் |
| --- | --- | --- |
| செல்லமுத்து விளையாட்டரங்கு, மானிப்பாய். | 09 – 11 | பி.ப. 3.30 |
| துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம். | 15 – 17 | பி.ப. 3.30 |
| செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானம், கல்வியங்காடு/ நல்லூர். | 18 – 19 | பி.ப. 3.30 |

உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்!

பிரவேசம் இலவசம்.

(சி/4206)



## கருத்தரங்கு

பொருள்:

''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை''

கருத்துரை வழங்குபவர்;

திரு. மு. திருநாவுக்கரசு (மல்லாகம் மாவட்ட நீதிபதி)

காலம்: 09-07-1998 வியாழக்கிழமை

நேரம்: பிற்பகல் 3.00 மணி

இடம்: ''அகவொளி'' குடும்ப வளத்துணை நிலையம், 131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(57390) – இயக்குநர்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org